

இளம்பரிதி
முத்தமிழ் விழா சிறப்பு மலர் ~ 2012, 2013.
நிதி அனுசரனை
திரு. தா. உதயஜீவதாஸ் (தவிசாளர்)
பிரதேசசபை, கோறளைப்பற்று
வாழைச்சேனை.
வெளியீடு
கலாசாரப்பேரவை
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று வாழைச்சேனை

# இளம் பரிதி – 2012 / 2013

## மட்டக்களப்பு மாவட்ட ஊர் பெயர்களின் வரலாறு

– நோக்கு –

எமது கலாசார வரலாற்று பாரம்பரியம் எமது இருப்பின், வெளிப்பாடு அதனை

நாம் எமது நாளைய சந்ததிக்கு கையளிப்போம்.

வெளியீடு

கலாசாரப் பேரவை
பிரதேச செயலகம்
கோறளைப்பற்று
வாழைச்சேனை

நிதி உதவி

திரு.தா.உதயஜீவதாஸ் (தவிசாளர்)
பிரதேசசபை
கோறளைப்பற்று
வாழைச்சேனை.

# கோறளைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவை

**தலைவர்**

திருமதி. தெ. தினேஷ் – பிரதேச செயலாளர்.

**உப தலைவர்கள்**

திரு. சு. ராஜ்பாபு (உதவிப் பிரதேச செயலாளர்)
திருமதி. ச. ஜெய்ந்திரா (கணக்காளர்)
திரு. எஸ். பிரபாகரன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர்)
ஜனாப். எஸ். ஏ. ரஹீம் (நிர்வாக உத்தியோகத்தர்)

**நிதிக்குழு கிராம உத்தியோகத்தர்கள்**

1. திரு. கு. நாகநாதன் – கல்குடா
2. திரு. சி. அரியக்குட்டி – சுங்கன்கேணி
3. திரு. கா. சண்முகநாதன் – வாழைச்சேனை
4. திரு. க. கஜேந்திரராஜா – கல்மடு
5. திருமதி. சாந்தினி குமாரவேல் – புதுக்குடியிருப்பு
6. திரு. க. ஜெகதீஸ்வரன் – கறுவாக்கேணி
7. திரு. எஸ். வரதராஜன் – கண்ணகிபுரம்/நாசிவன்தீவு
8. திரு. ஜெ. லோபனராஜ் – பேத்தாழை
9. திரு. கி. டிவாஸ்கர் – கிண்ணையடி
10. திரு. க. கிருஷ்ணகாந் – மீறாவோடை
11. செல்வி. ந. மந்தாகினி – கும்புறுமூலை

**செயலாளர்**

திரு. கே. எஸ். ஆர். சிவகுமார் .
(கலாசார உத்தியோகத்தர்)

**உப செயலாளர்**

செல்வி. ஸ்கொலஸ்டிகா அமலினி நந்தகுமார்
(கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**பொருளாளர்**

திரு. மு. ரவிச்சந்திரன்–(முகாமை உதவியாளர்)

**விடய எழுதுனர்**

செல்வி. எம். வி. எப். பர்ஸனா –(முகாமை உதவியாளர்)

**இணைப்பாளர்கள்**

திரு. சி. ஜெயசேகர் – (சமூக சேவை உத்தியோகத்தர்)
திரு. இ. சீதாராமன் – (முகாமை உதவியாளர்)

**இதழ் ஆசிரியர்**

திரு. சு. ராஜ்பாபு – (உதவிப் பிரதேச செயலாளர்)

**பேரவை உறுப்பினர்கள்**

1. கலாபூஷணம் தாழை செல்வநாயகம்
2. திரு. முத்துமாதவன்
3. கலாபூஷணம் எச். மெத்தியேஸ்
4. திரு. எ. ஜெயரஞ்சித்
5. திரு. ஆ. ஸ்ரீதர்
6. திருமதி. கோ. இந்திரகுமார்
7. திரு. ஜே. ஏ. ஓ. ஜவாத்
8. செல்வி .ரி. பவானி
9. திரு. ஏ. வினுராஜ்
10. திருமதி. தேவமனோகரி
11. திரு. செ. நல்லதம்பி
12. செல்வி.கந்தசாமி வினோதினி

**விழா ஏற்பாட்டுக் குழு**

கிராம சேவை உத்தியோகத்தர்கள்
சமுர்த்தி உத்தியோகத்தர்கள்
வெளிக்கள உத்தியோகத்தர்கள்
உள்ளக உத்தியோகத்தர்கள்
பட்டதாரி பயிலுனர்கள்
பாடசாலை அதிபர்கள்
கலைமன்ற அமைப்புக்கள்

**அச்சகம்**

நியூ கீன், மட்டக்களப்பு.

**அட்டைப்பட வடிவமைப்பு ஆலோசனை**

திரு. கே. எஸ். ஆர். சிவகுமார்
கலாசார உத்தியோகத்தர்

**அட்டைப்பட வடிவமைப்பு**

திரு. தங்கவடிவேல் சங்கர்
மல்ரிவிஷன் கணணிப்பதிவு நிலையம்
கல்முனைவீதி, அரசடி, மட்டக்களப்பு.

**கணணி அச்சிப்பதிப்பு**

செல்வி. சுபாசினி குமாரசிங்கம்
செல்வி. ஷண்முகப்பிரியா தங்கேஸ்வரன்

திருமதி. தெட்சணாகௌரி தினேஷ் (SLAS)
பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம், வாழைச்சேனை.



# முன்னுரை

எமது பிரதேச மலர்கள் யாவும் முன்னர் பாடசாலை மாணவ மாணவிகளுக்கும் வெளிமட்டக் கலைஞர்களுக்கும் போட்டிகள் நடாத்தி அதில் வெற்றி பெற்ற ஆக்கங்களையும் பல்வேறு வகை கட்டுரையாளர்களிடம் இருந்து கட்டுரைகள் பெறப்பட்டு ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்திகளுடனும், போட்டி முடிவுகளுடனும் வெளிவருவது வழமையாகும். இந் நிலையில் இருந்து மாறுபட்ட ஒரு பிரதேச இலக்கிய மலர் அப் பிரதேச அல்லது மாவட்டத்தின் ஆய்வுக்குரிய நூலாக மாற்றம் அடைய வேண்டுமெனும் எண்ணத்தின் வெளிப்பாடே இந்நூல்.

இந்நூல் வெளியிட போதியளவு நிதி இல்லாதவிடத்து அதற்கான முழுச் செலவினையும் ஏற்றுக் கொண்ட கோறளைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கௌரவ.தா.உதயஜீவதாஸ் அவர்களுக்கும் விழாவுக்குரிய நிதிகளைப் பெற்றுக் கொடுத்த கிராம சேவையாளர்களுக்கும் விழா சிறப்பு அடைய உதவிய சகலருக்கும் எனது தனிப்பட்ட இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-நன்றி-

திருமதி. தெட்சணாகௌரி தினேஷ்
பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவரும்,
பிரதேச செயலகம், வாழைச்சேனை.



**திரு.சிவனேசதுரை சந்திரகாந்தன்**
தலைவர் - தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள்,
முதலமைச்சர் - முன்னாள் கிழக்கு மாகாண சபை,
ஜனாதிபதியின் ஆலோசகர் - கிழக்கு மாகாண அபிவிருத்தி,
கிழக்கு மாகாண சபை உறுப்பினர் - மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி

# வாழ்த்துச் செய்தி

ஒவ்வொரு பிரதேசங்களும் முத்தமிழ் விழாவுடன் விழா மலரினையும் வெளியிட்டு வருவதுடன் கலைஞர்களுக்கு பாராட்டு விழா நடைபெறுவதும் இயல்பான ஒரு விடயமாக காணப்பட்ட போதிலும் அதில் ஏற்படும் நிதிச்சிக்கல்கள் ஆக்கங்கள் ஒரு பிரதேசத்தினை மட்டும் மட்டுப் படுத்தப்படுவது ஆரம்பகாலங்களில் காணப்பட்டபோது இன்று அவ் நிலைமாறி பிரதேசத்தின் தொன்மைசார் வரலாற்றின் ஆவணங்களாக வெளிவந்து கொண்டிருப்பது சிறப்பு மிக்கது.

இவ்வகையில் வாழைச்சேனை பிரதேச செயலக இளம்பரிதி முத்தமிழ் வெளியீட்டுச் சிறப்பு மலரானது தனது பிரதேச ஆய்வுகளின் முன்னைய மலர்களில் மேற்கொண்டு தற்போது மாவட்டத்தினைக் களமாகக் கொண்டு முன்னேறி இருப்பது பாராட்டத்தக்கது.

இவ்வகையில் முத்தமிழ் விழாச் சிறப்பு மலர் வெளியீட்டுக்கு உதவிய எமது கோறளைப்பற்று பிரதேச சபைத் தலைவர் தா.உதயஜீவதாஸ் அவர்களுக்கும் எனது தனிப்பட்ட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவ் நிகழ்விற்கு சகல வழிகளிலும் உதவிய பிரதேச செயலாளருக்கும், பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கும் எனது வாழ்த்துக்களினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.சிவனேசதுரை சந்திரகாந்தன்**
தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சித்தலைவரும்
முன்னாள் கிழக்கு மாகாண சபை முதலமைச்சரும்
கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் ஆலோசகரும்
கிழக்கு மாகாண சபையின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினரும்.

TMVP

திருமதி. பீ.எஸ்.எம்.சாள்ஸ் (SLAS)
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
மட்டக்களப்பு.



# வாழ்த்துச் செய்தி

எந்தவொரு சமூகமும் தனது இருப்பை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமானால் தனது மொழியில், மதத்தில், கலை கலாசார பாரம்பரியங்களில் மிகுந்த அக்கறை உடையவராக இருத்தல் வேண்டும்.

அல்லது போனால் மாற்றமடைந்து வரும் தற்கால சூழ்நிலையில் நாம் நலிவடையும் சூழல் ஏற்படும்.

இவ் வகையில் கோறளைப்பற்று பிரதேச செயலகமானது பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வந்த வேளையிலும் பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களின் விடா முயற்சியினால் முத்தமிழ் விழாவினை நடாத்தி விழா மலர் வெளியிடுவது பாராட்டத்தக்கதுடன் விழா மலர் பிரதேச வரலாறு கடந்து மாவட்ட வரலாறுகளையும் தொட்டுச் செல்வது ஆரோக்கியமான விடயமாகும்.

இம் முயற்சியில் ஈடுபட்ட பிரதேச செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எனது உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

திருமதி. பீ. எஸ். எம். சாள்ஸ்
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
மாவட்ட செயலகம், மட்டக்களப்பு.



திரு.தா.உதயஜீவதாஸ்
தவிசாளர்,
பிரதேச சபை, கோறளைப்பற்று,
வாழைச்சேனை.

# வாழ்த்துச் செய்தி

கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேச செயலக ஏற்பாட்டில் நடைபெறும் முத்தமிழ் விழாவை ஒட்டி வெளியிடப்படும் இளம்பரிதி எனும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். இளம்பரிதி எனும் எமது பிரதேச செயலக மலரானது வழமையான பணியில் இருந்து இம்முறை மாற்றம் பெற்று கோறளைப்பற்று கடந்து மாவட்ட மட்ட வரலாற்றின் வேர்களான இடங்களின் பெயர்களினை நாடிச் செல்வதை விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளுக்கும் கலாசாரப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு அவசியமாகும். அவ்வாறான நிதியினைக் கொண்டு உள்ளூராட்சி சபைகள் அதிக மனிதவலு உத்தியோகத்தர்களைக் கொண்ட பிரதேச செயலகங்களுடனும் பாடசாலைகளுடனும் இணையும் போது ஓர் ஆரோக்கியமான கலாசாரம் நிலைநிறுத்தப்படும் என்பது எனது நம்பிக்கை ஆகும்.

அவ் நம்பிக்கையின் முதல்படியாகவே பிரதேச செயலகப் பணிக்கு என்னால் இயன்ற உதவியினை மேற்கொண்டேன். என்பதனை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதுடன் விழாசிறப்பு அடைய உதவும் அனைவருக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்கள்.

அன்புடன்
திரு.தா.உதயஜீவதாஸ்
தவிசாளர்,
பிரதேச சபை, கோறளைப்பற்று.

திரு. சுந்தரமூர்த்தி ராஜ்பாபு (SLAS)
உதவிப் பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
வாழைச்சேனை.



# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

இதுவரை காலமும் எமது பிரதேச செயலக முத்தமிழ் விழா சிறப்பு மலர் இளம் பரிதி பாடசாலை மட்டக் கலைஞர்களையும் வெளிமட்டக் கலைஞர்களையும் உள்ளடக்கிய ஓர் இலக்கிய நூலாக வெளி வந்தது. பாடசாலை மாணவ மாணவிகளுக்கும், வெளிமட்டக் கலைஞர்களினதும் ஆக்கங்களுக்கு பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் அதிகம் வெளிவர வாய்ப்பு உள்ளமையினால் பிரதேச செயலகங்கள் வெளியிடும் நூல்கள் ஓர் வரலாற்று உதாரணமாக விடயக்கனதியும் காணப்பட வேண்டும். அவை தொகுக்கப்பட்ட ஆவணமாக இருப்பினும் சிறப்பு என்பதன் அடிப்படையில் எமது கன்னி முயற்சி இது. இதற்கு உதவிய சகலருக்கும் எனது தனிப்பட்ட நன்றிகளினை தெரிவிப்பதுடன் விசேடமாக நிதிபங்களிப்பினை தனிப்பட்ட ரீதியில் வழங்கிய பிரதேச சபைத் தவிசாளர் திரு. தா. உதயஜீவதாஸ் அவர்களுக்கும் எனது தனிப்பட்ட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. சு. ராஜ்பாபு
உதவிப் பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவை உப தலைவரும்,
பிரதேச செயலகம், வாழைச்சேனை.




**திரு.கே.எஸ்.ஆர்.சிவகுமார்.**
கலாசார உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
வாழைச்சேனை.


# கலாசார உத்தியோகத்தரின் வெளியீட்டுரை

நாம் எமது முன்னோர் எமக்கு இட்டு வைத்த சமூக கலாசார அத்திவாரத்தில் தான் காலூன்றி நிற்கின்றோம். எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மூதாதையரின் வரலாற்றையும் கலாசாரப் பின்னணியும் அறிந்து கொள்ளும் போது அவனுடைய செயற்பாடுகள் சிறப்பாக அமையும். இவ்வகையில் எம் முன்னுள்ள முக்கியமான கடப்பாடாக ஒரு சமூகத்தின் அல்லது ஒரு பிரதேசத்தின் வாழ்வியல் பண்பாடுகளை அச்சமூகத்தின் எதிர்கால சந்ததிக்கு மிகவும் சரியான முறையில் எழுதி பாதுகாத்து வைக்குமளவுக்கு எமது செயற்பாடு காணப்படல் வேண்டும்.

இச் செயற்பாடு பல வகை வியாக்கியானங்கள் ஊடாக மேற்கொள்ளும் போது சரியான விடயங்கள் புலப்படும் அதிலும் பல விமர்சனங்கள் ஏற்படும் சரியான விடயத் தெரிவு இடம் பெறும்.

இவ்வகையில் எமது பிரதேச செயலகமானது ஒன்பதாவது முத்தமிழ் விழா சிறப்பு மலராகிய இளம் பரிதியினை வெளியிடுவது பெருமகிழ்ச்சி ஏற்படினும் விழா மற்றும் மலர் வெளியீடுகளின் போது நிதி தொடர்பான பிரச்சினைகளையும் போட்டியாளர்களின் பங்களிப்பு ஆக்கங்கள் பெறுவதில் ஏற்படும் இடர்பாடுகளின் நிமித்தம் கால தாமதம் ஏற்படினும் தரம் மிக்க நூலாக வெளியிடல் வேண்டும் எனும் பேரவையின் நோக்கத்தினை நாம் ஓரளவு வெற்றி பெற்று வந்து இருக்கின்றோம்.

இவ்வகையில் இவ் ஒன்பதாவது மலரில் இருந்து இளம் பரிதி சிறப்பு மலர் யாவராலும் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கும் கையளிக்கும் ஒரு நூலாக மாறும் எனும் நம்பிக்கை கொண்டு அதற்கு இறைவனின் ஆசியினையும் வேண்டி நிற்கின்றேன்.

விழா மலரை வெளியிடும் போது வழமையாக ஏற்படும் நிதிச் சிக்கலை எதிர்நோக்கிய போது விழா மலரின் உள்ளடக்கம் யாது என வினாவி அதன் பின்னர் அதனை மனப் பூர்வமாக ஏற்று மலர்ச் செலவினை முழுமையாக ஏற்றுக் கொண்ட கோறளைப்பற்று தவிசாளர் திரு.தா.உதயஜீவதாஸ் அவர்களுக்கும் விழாவுக்கான நிநிச்செவினை ஏற்றுக்கொண்ட கிராமசேவையாளர்கள் மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் எனது தனிப்பட்ட இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதுடன் மட்டக்களப்பின் சில வீதிகளின் பெயர்கள் மாற்றம் அடைந்து வரும் போது (கல்லடிப் பாலத்தின் முகப்பு வாசலில் இடதுபுறவீதி) அதனைச் சுட்டிக்காட்டி இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட முன்னர் இடங்களின் பெயர்கள் ஆவணமாக்கப்பட வேண்டும் என கலாசார உத்தியோகத்தர் எனும் ரீதியில் எனக்கு ஆலோசனை வழங்கிய பேராசிரியர் திரு. செ.யோகராசா அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அது தொடர்பான ஆலோசனைகளைப் பெற முயன்ற போது போதிய உதவி செய்த அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவிப்பதுடன் குறிப்பாக கலாபூசனம் திரு. தாழை செல்வநாயகம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.


**திரு.கே.எஸ்.ஆர்.சிவகுமார்.**
கலாசாரப் பேரவையின் செயலாளரும்,
கலாசார உத்தியோகத்தரும், பிரதேச செயலகம், வாழைச்சேனை.

# மட்டக்களப்பு மாவட்ட ஊரும் பெயரும் பற்றிய ஓர் ஆய்வுக் கண்ணோட்டம்

மட்டக்களப்பு மாவட்டம் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் மையப்பகுதியில் உள்ளது.

தெற்கே நீலாவணை தொடக்கம் வடக்கே மகாவலிபாயும் வெருகல்துறையினையும் மேற்கே பொலநறுவையினையும் கிழக்கே இந்து சமுத்திரக் கடலையும் கொண்ட ஒரு மாவட்டமாகும்.

மட்டக்களப்பு மாவட்டம் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட சனத்தொகைப் பெருக்கம் அரசியல் பரிபாலனம் ஆகியவற்றின் தாக்கங்கள் காரணமாக இன்று பதினான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டு காணப்படுகின்றது. அவையாவன

| | |
|---|---|
| 01. கோறளைப் பற்று (வடக்கு ) - வாகரை | 08. மண்முனை வடக்கு -மட்டக்களப்பு |
| 02. கோறளைப் பற்று - வாழைச்சேனை | 09. காத்தான்குடி - முஸ்லீம் |
| 03. கோறளைப் பற்று (மத்தி) - முஸ்லீம் | 10. மண்முனைப் பற்று - ஆரையம்பதி |
| 04. கோறளைப் பற்று (மேற்கு) - முஸ்லீம் | 11. மண்முனை மேற்கு - வவுனதீவு |
| 05. கோறளைப் பற்று (தெற்கு) - கிரான் | 12. மண்முனை தென்மேற்கு - பட்டிப்பளை |
| 06. ஏறாவூர் பற்று (தமிழ்) - செங்கலடி | 13. போரதீவுப் பற்று - வெல்லாவெளி |
| 07. ஏறாவூர் பற்று (ஏறாவூர் நகர்) - முஸ்லீம் | 14. மண்முனை தென்எருவில் பற்று - களுவாஞ்சிகுடி |

இடப்பெயர்களின் தோற்றம் பற்றி எடுத்து நோக்கும் போது மனித இனம் நாடோடி வாழ்க்கையிலிருந்து நிலையாக ஓரிடத்தில் வாழத் தலைப்பட்ட காலத்தே ஊர்ப்பெயர்கள் தோற்றம் பெற்று இருக்க வேண்டும். ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊரை வேறுபடுத்திக்காட்ட இடப்பெயர்களை அமைத்துக் கொண்டனர்.

இடப்பெயர்கள் வரலாற்றின் காலப் பெட்டகம் பழமையின் எச்சங்கள் மனித வரலாற்றின் பண்பாட்டினையும் விளக்குவனவாக உள்ளன. இதன் படி மட்டக்களப்பு மாவட்ட இடப்பெயர்களை எடுத்து நோக்கும் போது மட்டக்களப்பு வரலாற்றின் பின்னணியுடன் கூடிய வரலாற்றுச் சம்பவங்களை அறிந்து கொள்ளமுடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இடப் பெயர்களின் இறுதியில் ஊர், குடி, கேணி, முனை, குடா, காடு, தீவு, துறை, குளம், வெளி, களி, சோலை, வெம்பு, சேனை மடு, ஓடை, வட்டை, மலை, காமம், ஆறு, மாரி ஆகிய பெயர்ப் பதங்கள் காணப்படுவதனை அறியக் கூடியதாயுள்ளது.

இடப்பெயர் ஆய்வில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் கிடைக்கப்பெற்ற ஊர்கள் பற்றிய தரவுகளே ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. கிடைக்கப்பெறாத ஊர்கள் பற்றிய தகவல்களும் ஆய்வு செய்யப்பட வேண்டியது எதிர் காலத்தில் நன்மை தரும் என்பது திண்ணம்.

## கோறளைப் பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலகப் பிரிவு ஊரும் பெயரும்

**கதிரவெளி :-**

நெற்கதிர்கள் நிறைந்த வயல்வெளிகளும் விவசாயிகளும் நிறைந்து காணப்பட்டமையினால் இவ்வூர் கதிரவெளி எனப்பெயர்பெற்றபோதும். வரலாற்று ரீதியாக நோக்கும் போது கதிரவன்னிமை எனும் நிழக்கிழார் ஆட்சி செய்தமையினால் கதிரவன்னி என இப்பிரதேசம் முதல் அழைக்கப்பட்டது என்றும் பின்னர் இக் கிராமத்திற்கு மாவட்ட ஆட்சியாளர் வருகை தந்தபோது கதிரவன்னியும் ஊர் மக்களும் நெற்கதிர்கள் மூலம் பந்தல் இட்டு வரவேற்றபோது மனம் மகிழ்ந்த ஆட்சியாளர் கதிர்வெளி என அழைக்க கதிரவன்னி கதிரவெளி ஆயிற்று என்பர்.

**பால்ச்சேனை :-**

மாடு கன்றுகளும், சிறுசேனைப் பயிர்செய்யும் நிலங்களும் நிறைந்திருந்தமையினால் பால்சேனை எனப் பெயர்பெறலாயிற்று. இக்கிராமத்தில் செங்கல் சுடும் வாடிகளும் முன்னாளில் அநேகமாகக் காணப்பட்டன. முடவன்கேணி என்ற பெயரும் கிராமத்தின் பெயராக உள்ளது.

**ஆண்டான் குளம் :-**

கதிரவெளிக் கிராமத்திற்கு மேற்குப்புறமாக ஒரு விவசாயக்கிராமம் குளமும் உள்ளது. இங்கு ஆண்டாள் எனும் போது நீண்ட காலமாக குளத்திற்கு அருகே வசித்து வந்தமையினால் அது ஆண்டாள் குளம் எனவும் பின்னர் அது மருவி ஆண்டான் குளம் ஆயிற்று என்பர்.

**வம்மி வட்டவான் :-**

வம்மிமரங்கள் நிறைந்திருந்த நீரோடைகள் நிறைந்திருந்தமையினால் வம்மி வெட்டை பின்னர் வம்மி வட்டவான் என இப்பெயர்பெறலாயிற்று. கோமத்தலாமடு எனும் ஒர கிராமமும் இங்குள்ளது. மாடுகளும் மேய்ச்சல் நிலங்களும் நிறைந்திருந்த கிராமம். கோமத்தலாமடு என்ற பெயரும் உள்ளது.

**கண்டலடி :-**

உப்பு நீர் ஏரியில் கண்டல் தாவரங்கள் நிறைந்து இருந்தமையால் கண்டலடி எனப் பெயர்பெறலாயிற்று. இக்கிராமத்தின் மேற்கே உள்ள கிராமம் புளியங் கண்டலடிக் கிராமம் புளியமரங்கள் இங்குள்ளதனால் புளியமரத்தின் பெயரையும் சேர்த்து புளியங்கண்டலடி எனப்படுகின்றது.

**வாகரை :-**

விவசாயிகளும் மீனவர்களும் வாழும் கிராமம். வாகை மரங்கள் உள்ளமையினால் இப் பெயர் ஏற்பட்டது. போர்க்களத்தில் வீரர்கள் வெற்றிபெற்றதும் வாகைமரத்தின் பூக்களைத் தலையில் சூடுபவர்கள். அதனாலும் இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம். வடக்கின் கரை வாகரை ஆகியது என்றும் நீர்கரைகளில் வாகைமரங்கள் நின்றதனால் ஏற்பட்டிருக்கலாம்.

**ஊரியன் கட்டு :-**

வாகரைக்கு மேற்காக உள்ள கிராமம். ஊரி எனப்படும் நத்தை போன்ற பிராணிகள் அதிகம் இருந்த காரணத்தினால் ஊரியன் கட்டு எனப் பெயர்பெற்றிருக்கலாம். மேலும் ஆற்று வெள்ளம் ஏறாமல் இப் பகுதி கட்டு (அணை) கட்டப்பட்டமையினால் மேற்படி பெயர் ஏற்பட்டது எனலாம்.

**பனிச்சங்கேணி :-**

பனிச்சைமரங்கள் நிறைந்த கேணிகளும், குளங்களும் காணப்பட்டமையினால் பனிச்சங்கேணி எனப் பெயர்பெறலாயிற்று. இங்குள்ள உப்புநீர் ஆற்றின் மேலாக ஒரு நீண்டதொரு பாலம் போன்று உள்ளது குறிப்பிடத்தக்கது.

**மாவடிஓடை :-**

காட்டு மாமரங்கள் நிறைந்த நீர் ஓடைகள் நிறைந்திருந்தமையால் மாவடிஓடை எனப் பெயர்பெறலாயிற்று. புதிய குடியேற்றக் கிராமமாய் உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களால் இக் கிராமத்தவர்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

**மாங்கேணி :-**

இங்குள்ள கேணியில் மானினங்கள் நீர்குடித்தமையினால் மான்கேணி என்பது திரிவுபட்டு மாங்கேணியாக மாறியது.

**கிரிமிச்சை :-**

பெரிய குளம் இங்குள்ளது. கிரிமிச்சை எனப்படும் முள் நிறைந்த மரங்கள் இங்கு காணப்பட்டதால் இப் பெயர் ஏற்பட்டது. பிரதான வீதியில் மரமுந்திரிகைப் பண்ணை ஒன்று இருந்தது. இதனால் **(Cahew Farm)** பாம் கொலனி எனவும் பெயர் பெற்றது. மாட்டுப் பட்டிகளும் இங்குள்ளன.

**மதுரங்கேணிக் குளம் :-**

மதுரைமரங்கள் நிறைந்த குளத்தையுடைய கிராமம். இங்கு விவசாயநிலங்களே உள்ளன. சிறுசேனைப் பயிர்ச் செய்கைகளும் உள்ளன.

**குஞ்சன் குளம் :-**

முன்னாளில் குஞ்சன் என்ற பெயரையுடைய விவசாயி குளத்தின் அருகே சேனைவெட்டியிருந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறப்படுகின்றது.

**காயான்கேணி :-**

இது ஒரு கடலருகுக் கிராமம் நீலநிற பூப்பூக்கும் காயான் மரங்களையுடைய கேணி ஒன்று இருந்ததால் காயான்கேணி எனப் பெயர் பெற்றது. இங்கு வேம்புக்காடுகளும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**இறால் ஓடை :-**

காயான்கேணிக்குத் தெற்காக உள்ள கடற்கரைக் கிராமம் இறால் ஓடை என்பதாகும். இங்குள்ள நீரோடைகளில் அதிகளவு இறால் பிடிப்பதால் இறால் ஓடை எனப்படுகின்றது.

**வட்டவான் :-**

மூன்று பக்கம் உப்பாறும் ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்ட ஒரு சிறிய தீவுக்கிராமம் இக்கிராமம் சுனாமியின் அழிவுக்குப் பின்னர் சிறிய வட்டவான் எனும் பெயருடன் மீள் குடியேற்றக் கிராமமாக உள்ளது.

**காணிக்கை வேப்பையடி :-**

காயான்கேணிக்குத் தென்புறமாக பிரதான வீதியில் நாட்டுக் கால்துறைப் பாலத்தை அண்டி நின்ற ஒரு வேம்பு மரத்தில் ஒரு பொந்து அமைந்திருந்தது. இவ்வழியால் செல்லும் பிரயாணிகள் அம்மரப் பொந்தினுள் காணிக்கை போட்டுச் செல்வார்கள். இதனால் இப் பெயர் வந்தது. தென்மேற்கே பாலைப்பழச்சோலை முன்னாளில் இருந்தது. தற்பொழுது வயல் நிலங்களாகி விட்டது. காரைமுனை என்ற பெயரும் வழங்கி வருகின்றது. காரைமரங்கள் (பழம்) நிறைந்தும் காணப்பட்டன.

**நாவலடிச் சந்தி :-**

நாவல் மரங்கள் நிறைந்திருந்தமையால் இப்பெயர் ஏற்பட்டது. திருகோணமலைப் பிரதான பாதையும் கொழும்புப் பிரதான பாதையும் பிரியும் ஒரு சந்தியாகவும் உள்ளது. இது முஸ்லிம் மக்களின் குடியேற்றமாகவும் உள்ளது. ஹிஸ்ரா நகராகவும் உள்ளது.

**கேணி நகர் :-**

ஆலங்கேணிக் குளம் இங்குள்ளதால் கேணிநகர் என்றும் அழைக்கப்படுகின்றது. புணானையின் கிழக்காக உள்ளது.

**ஆலங்குளம் :-**

ஆலமரங்கள் குளத்தில் நின்றதால் பெயர் ஏற்பட்டது.

**குப்புளாக்கொடி :-**

கால்நடை வளர்ப்பும் விவசாயிகளும் உள்ள கிராமம் குப்புளாக்கொடி என அழைக்கப்படுகின்றது.

**மீயான் குளம் :-**

குளத்தில் எலிகள் நிறைந்திருந்தமையால் மீயான்குளம் எனப் பெயர்பெற்றது.

**ஆனை சுட்ட கட்டு :-**

இங்குள்ள குளத்தின் கட்டு உயரமானது. இந்தக்கட்டில் யானையொன்று சுட்டுக்கொல்லப்பட்டதால் இப் பெயர் ஏற்பட்டுள்ளது. இங்கு சேனைப்பயிர், நெல்விவசாயம் செய்பவர்கள் ஆடுவளர்ப்போர் உள்ளனர்.

**புணானை :-**

இங்கு ஒரு குளம் உள்ளது. இது சேனைப்பயிர் செய்வோரின் குடியேற்றக் கிராமமாக இருந்தது. இங்கு அரசமரக் கொந்துராத்துக்களின் மரவாடிகள் பல இருந்தன. இங்குள்ள மரவாடியில் மரம் இழுத்த யானை ஒன்று மதம் பிடித்து காலில் இருந்த சங்கிலியை அறுத்து அதனால் ஏற்பட்ட புண்ணுடன் தப்பி ஓடி இந்தப் பிரதேசத்தைச் சுற்றித் திரிந்ததால் புண்பிடித்த யானை புண்ஆனை புணானையாக மாறியது. இதுவே கோறளை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கு எல்லைக் கிராமமாகும். இங்குள்ளபடி வெட்டிய மலையில் கோட்டை, வரிசையாக செதுக்கிய எழுபத்தொரு படிகளும் உள்ளன.

**வெருகல் :-**

கதிரவெளி கிராம சேவையாளர் பிரிவில் காணப்படும் சிறு கிராமம். வெருகு எனும் புல் அடர்ந்து பரவலாக காணப்படுவதால் இப் பெயர் ஏற்பட்டது.

**புதூர் :-**

கதிரவெளி கிராம சேவையாளர் பிரிவில் 2004ம் ஆண்டு சுனாமியின் பின்னர் ஏற்படுத்தப்பட்ட புதிய குடியேற்ற கிராமம்

**புச்சாக்கேணி :-**

கேணி ஒன்றில் ஆடு. மாடு போன்ற கால்நடைகள் நீர் குடிக்க வரும்போது அங்கு பதுங்கியிருந்த புலி மிருகங்களை புச் எனப் பாய்ந்து பிடித்ததால் இப்பிரதேசம் புச்சாக்கேணி என அழைக்கப்பட்டது என்பர். மேலும் இங்குள்ள கேணி மடுவினைச் சுற்றியுள்ள புற்கள் கோடை காலத்திலும் இருக்கும் எனவே ஆரம்பத்தில் புல்சாகாகேணி என அழைக்கப்பட்டு பின்னர் மருவி புச்சாக்கேணி என அழைக்கப்பட்டது என்பர்.

**தோணி தாட்டமடு :-**

இங்குள்ள பெரிய மடுவில் தோணி தாண்டமையினால் தோணி தாண்டமடு எனவும் பின்னர் அது மருவி தோணி தாட்டமடு எனவும் அழைக்கப்பட்டது என்பர்.

**முடவன்கேணி :-**

கால் ஊனமுற்றவன் கேணி அருகே வாழ்ந்தமையினால் ஏற்பட்ட பெயர்.

**அமந்தனாவெளி :-**

பரந்தவயல் வெளியில் அம்மனை வைத்து வழிபட்டமையினால் ஆரம்பத்தில் அம்மன் வெளி எனவும் பின்னர் அம்மந்தனா வெளி எனவும் அழைக்கப்பட்டது.

**கோமத்தலாமடு :-**

இங்குள்ள மடுவில் சிறிய முதலைகள் (கோமுதலை) இருந்ததால் இக்கிராமம் ஆரம்பத்தில் கோமுதலைமடு எனவும் பின்னர் மருவி கோமத்தலாமடு எனவும் அழைக்கப்பட்டது.

**புளியங்கண்டலடி :-**

வாகரை வடக்கில் கண்டலடி கிராமசேவையாளர் பிரிவின் அடுத்த கிராமம் இங்கு மேட்டு நிலப்பகுதியில் புளியங்காடு அடர்ந்து காணப்பட்டமையினால் ஏற்பட்ட பெயர்.

**மாணிக்கபுரம் :-**

வாகரை மத்திய பிரதேசத்தில் உள்ள கிராமம். மாணிக்கவாசகர் என்பவர் இவ்வூரில் தேர்தலில் போட்டியிட்டு வென்றமையினால் அவரது நாமம் பெயர் சூட்டப்பட்ட கிராமம்.

**ஓட்டுமடு :-**

வாகரை மத்தி பிரதேசத்தில் மடு வினை சுற்றி ஓட்டுபுல் அடர்ந்து வளர்ந்து காடு போன்று காணப்படுகின்றது. இதனால் இக் கிராமம் ஓட்டுமடு என அழைக்கப்பட்டது.

**அழகாபுரி :-**

வாகரை மத்திய பிரதேசத்தில் அழகிய குழந்தை பிறந்ததாகவும் இதற்கு பெற்றோர் அழகா என பெயர் வைத்ததாகவும் இங்கு அடர்ந்த மரங்கள் உடைய காடு (புரி) காணப்படுவதால் அழகா புரி என அழைக்கப்பட்டது என்பர்.

**வெல்லையடி மடு :-**

ஊரியங்கட்டு கிராம சேவையார் பிரிவில் ஓர் இடத்தில் வெல்லை எனும் நார்மரம் காணப்படுவதுடன் பெரியமடு வாய்க்கால் என்பன காணப்படுவதால் இப் பகுதி வெல்லையடி மடு என அழைக்கப்படுகின்றது.

**தட்டுமுனை :-**

ஊரியன் கட்டு கிராம சேவையாளர் பிரிவில் ஆற்றில் முனைகளுடன் கூடிய தட்டு போன்ற அமைப்பு உள்ளது. இதன் ஒருபகுதி பெரிய தட்டு முனை எனவும் மற்றைய பகுதி சிறிய தட்டு முனை எனவும் அழைக்கப்பட்டது.

**கோயில்குடியிருப்பு :-**

பனிச்சங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் ஸ்ரீ முருகன் ஆலயத்தினை அண்டிய பகுதியில் குடியிருப்புக்கள் இருந்ததினால் இப்பகுதி கோயில் குடியிருப்பு என அழைக்கப்பட்டது.

**சல்லித்தீவு :-**

பனிச்சங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் காணப்படுவது ஆரம்பத்தில் மில்ரிகுடியிருப்பு என அழைக்கப்பட்டது. காரணம் இங்கு பிரிட்டிஷ் இராணுவ முகாம் அமைத்ததன் காரணமாக இப் பெயர் வந்ததாக கூறப்படுகின்றது. இக்கிராமத்தில் சல்லித்தீவு என அழைக்கப்பட்டக் காரணம் பாரிய சல்லியினால் ஆன தீவு என்று உள்ளதால் இது சல்லித்தீவு என அழைக்கப்படுகின்றது.

**நடுக்குடியிருப்பு :-**

கோயில் குடியிருப்புக்கும் சல்லித்தீவுக்கும் இடைப்பட்ட குடியிருப்பு நடுக்குடியிருப்பு என அழைக்கப்பட்டது.

**மதுரங்கேணி குளம் :-**

மடுவினை சுற்றி மதுர மரங்கள் இருந்ததாலும் அதற்கு அடுத்தாற் போல் ஓர் குளம் இருந்ததால் இப்பகுதி மதுரங் கேணி குளம் எனப் பெயர் பெற்றது.

**பாம் கொலனி :-**

கிரிமிச்சையின் உள்ள கிராமம் இங்குள்ள மக்கள் குடியேற்றப்பட்டதுடன் இங்குள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டம் வயல் பூமிகள் கால்நடைகள் வழங்கப்பட்டு பால் பண்ணைகள் இருந்தமையினால் ஏற்பட்டபெயர்.

**2ம் கட்டை :-**

மாங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் மாங்கேணியில் இருந்து தூர கணிப்பு கட்டை இருக்கும் கிராமம் இது 2ம் கட்டை என அழைக்கப்படுகின்றது.

**கொக்குவில் :-**

மாங்கேணி கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கிராமம் இங்குள்ள வில்லு குளத்தில் கொக்குகள் அதிகமாக நிற்பதனால் இக்கிராமம் கொக்கு வில் எனவும் அழைக்கப்பட்டது.

**பிரம்பையடி மடு :-**

பிரம்பு மரங்கள் நீர் மடுக்கள் சூழ்ந்து காணப்பட்டதால் இப் பகுதி பிரம்பையடி மடு எனவும் அழைக்கப்பட்டது.

**கோபாலபுரம் :-**

காயங்கேணியில் உள்ள கிராம சேவையாளர் பிரிவில் விஷ்னு ஆலயம் உள்ள கிராமம் கோபாலபுரம் என அழைக்கப்பட்டது.

**ஆலங்குளம் :-**

இக் கிராமமானது ஆரம்பத்தில் இலுப்பணிக்கேணிதிடல் என்றும் இரு கொன்றையடிமடு என்றும் அழைக்கப்பட்டது. காரணம் இங்குள்ள சேனையில் இலுப்ப மரங்கள் நின்றதால் இலுப்பக்கேணி திடல் என்றும் குளத்தில் திருக்கொன்றை மரங்கள் நின்றதால் திருக்கொன்றையடிமடு என அழைக்கப்பட்டதால் 1964ல் இக் கிராமத்தில் 25 குடும்பங்கள் தகர வீடுகளுடன் குடியேற்றப்பட்டன பின்பு இக்கிராமத்தில் ஆலமரங்கள் நின்றதால் ஆலங்குளம் என தற்போது இக் கிராமம் அழைக்கப்படுகின்றது.

**ஓமடியாமடு :-**

புனாணை கிழக்கு பிரதேசத்தில் ஓமடியா மரங்கள் அதிகமாக காணப்பட்டதால் இக்கிராமம் ஓமடியா மடு என அழைக்கப்பட்டது.

**கட்டுமுறிவு :-**

குளக்கட்டு ஒன்றினை கட்டும் போது அதில் அடிக்கடி உடைவு (முறிவு) ஏற்பட்டதால் இக் குளத்தினை அடிப்படையாக வைத்து இக் குளத்திற்கு கட்டுமுறிவு என பெயர் பெறப்பட்டது என்பர்.

## கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச செயலகப் பிரிவு ஊரும் பெயரும்

**நாசிவன் தீவு:-**

சுற்றிவர நீர்நிலைகளால் சூழப்பட்ட ஒரு தீவு. முற்காலத்தில் நாசிவன் என்பவரும் அவரது குடும்பமும் இங்கு வாழ்ந்ததால் இப் பெயர் ஏற்பட்டது எனவும் பின்னர் நாசிவன் தீவு எனப் பெயர் மாற்றமடையலாயிற்று. வாழைச்சேனைக் கிராமத்தின் வட எல்லையில் உள்ள மதுறு ஓயா என்னும் உப்பாற்றிற்கு அப்பால் உள்ளது.

**வாழைச்சேனை :-**

முன்னர் காக்கைப்பள்ளி என அழைக்கப்பட்டது. இங்குள்ள மரங்களில் காக்கைகள் பள்ளி கொள்வதால் (தங்குவதால்) இப்பெயர் ஏற்படலாயிற்று. வாழைச்சேனைக்குக் கிழக்குப் புறமாக உள்ள பற்றைக்காட்டுப் பிரதேசத்தின் ஊடாக நீரோடையும் அதனைச்சூழ மருங்கை மரங்களும் நின்றதனாலும், மருங்கை மரத்தருகில் நீர் பிடிக்கும் பூவல்கள் (மடுக்கள்) இருந்தமையாலும் மருங்கையடிப் பூவல் எனவும் வாழைச்சேனை பெயர் பெற்றிருந்தது. வாழைமரங்கள் நிறைய நடப்பட்டு சேனைபோன்றிருந்த கிராமம் ஆகையாலும் இப் பெயர் ஏற்பட்டது. போர்நிகழாத காலகட்டங்களில் சேனைகள் காடுவெட்டி வாழை செய்த இடம் என்பதும் ஒரு சாராரின் கருத்து.

**பேய்த்தாழை :-**

இக்கிராமத்தின் வடக்கு எல்லைப் புறமாக ஓடிச்செல்லும் மதுறுஓயா ஆற்றின் கரையோரமாக தாழை மரங்கள் நின்றன. என்றும் அவற்றில் பேய்கள் குடிகொண்டிருந்தன எனவும் இவ் ஊரின் கிழக்கு எல்லையில் அமைந்துள்ள மயானத்தில் ஆலமரங்கள் நின்றன. அவற்றில் பேய் ஒன்று நிலத்தில் தலையினையும், மரத்தில் காலினையும் வைத்து தூங்கியதாகவும் (நித்திரை) அதனால் இங்குள்ள ஆலமரங்கள் பேயாலை எனப் பெயர் பெற்றிருந்தது. காலவரையில் பேய்த்தாழையாக மாறியது என்பதுவும் ஒருசாராரின் கருத்து.

**கருங்காலிச் சோலை :-**

கருங்காலி மரங்கள் நிறைந்த சோலையாக இருந்த இடம் இது அழிக்கப்பட்டு மக்கள் குடியேறினர். சுனாமியின் பின்னர் கல்குடா பாசிக்குடாவில் இருந்த இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கான வீட்டுத் திட்டமும், சுனாமி வீட்டுத்திட்டமும் இங்கு அமைந்துள்ளன.

**பட்டியடிச் சேனை:-**

ஆரம்ப காலங்களில் இங்கு மாட்டுப்பட்டிகளும், சேனைகளும் நிறைந்திருந்தமையினால் பட்டியடிச்சேனை என்று அழைக்கப்பட்டது. மாட்டுப்பட்டி வைத்தவரின் பெயர் சம்மார் என்பதாகும்.

**கல்குடா :-**

சல்லிக்கற்களும் (சுண்ணக்கல்) கல்மலைகளும் நிறைந்த குடா போன்ற கடற்பரப்பினால் இப் பெயர் ஏற்படலாயிற்று. முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களில் இங்கு ஒரு துறைமுகம் இயங்கி வந்தது. இங்கு வெளிச்சவீடு காணப்பட்டது. 2ம் உலகப் போரின்போது குண்டு வீச்சுக்கு உள்ளாகியது. சுனாமி பாதிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு ஊடாக இது அழிவுக்கு உள்ளாகியது.

**பாசிக்குடா :-**

பச்சை நிற கடற்பாசிகளைக் கொண்டதாய் இருந்த குடா போன்ற கடற்பரப்பினை உடைய இப்பிரதேசம் பாசிக்குடா என அழைக்கப்பட்டது. கடற்குளிப்புப் பிரதேசமாகவும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் ஹோட்டல்கள் அமைந்திருந்த இடமாகவும் இருந்தது. காலவரையில் அழிவடைந்துள்ளது. தற்போது மீண்டும் உல்லாசப் பிரயாணக் கைத்தொழில் வளர்ச்சி பெற்று வரும் இடமாகவும் அதேவேளையில் கலாசாரத்தினை இறுகப் பாதுகாக்க வேண்டிய இடமாகவும் உள்ளது.

**கல்மடு :-**

கற்கள் நிறைந்த மடுக்கள் காணப்பட்டதால் கல்மடு எனப் பெயர் வரக் காரணமாயிற்று. ஐம்பது வீட்டுத்திட்டம் இங்குள்ளது.

**வலைவாடிக் கிராமம் :-**

நூறுவருட காலங்களாக மீனவர்கள் குடியமர்ந்திருந்த வலைவாடிக் கிராமம் 1990ம் ஆண்டில் ஏற்பட்ட வன் செயல்களின் போது முற்றாக அழிவுக்குள்ளாகியது.

**ஜீவ நகர் :-**

இக்கிராமத்தில் பணியாற்றிய வாழைச்சேனையை சேர்ந்த கிராம சேவை உத்தியோகத்தரான அழகரெத்தினம் ஜீவரெத்தினத்தின் சார்பாக இப் பெயர் சூட்டப்பட்டது.

**மருதநகர் :-**

இப் பகுதி பள்ள நிலமாக இருந்த காரணத்தினாலும் மருத மரங்கள்காணப்பட்டமையினாலும் வயல் சார் நிலத்தின் பண்புகள் நிறைந்திருந்தமையினாலும் மருதநகர் எனப் பெயர் பெற்றது. அண்மைக் காலத்தில் தோன்றிய கிராமமாகும்.

**விநாயகபுரம் :-**

முன்னர் இப் பிரதேசம் பன்றிமடு என அழைக்கப்பட்டது. இங்கு ஓர் தாமரைக்குளம் உள்ளது. பிள்ளையார் வழிபாட்டு ஆலயமும் உள்ளதால் அதற்கு முன்னுரிமையளிக்கப்பட்டு விநாயகபுரம் என அழைக்கப்பட்டது. இது அண்மைக்கால குடியேற்றக் கிராமமாகும்.

**கண்ணகிபுரம் :-**

கோராவெளி என அழைக்கப்பட்டட இவ்விடம் முன்னாளில் கத்தியன் பள்ளம் என அழைக்கப்பட்டது. தென்னங்காணியில் இருந்த ஒருவர் கத்தியுடன் சுற்றித் திரிந்ததால் கத்தியன் பள்ளம் என்று அழைக்கப்பட்ட இவ்விடம் கண்ணகிபுரம் என்றாகி பின்னர் ஒரு பகுதி கருணைபுரமாக மாறியது. இங்கு கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது.

**புதுக்குடியிருப்பு :-**

வாழைச்சேனை கிராமத்தில் தெற்கு எல்லையில் முதன் முதலாக நடந்த குடியேற்றக்கிராம மக்கள் புதிதாக குடியேறிய கிராமமாகையினால் இப் பெயர் ஏற்பட்டது. இங்கு மக்கள் குடியேற முன்னர் உருவாக்கப்பட்ட ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் உள்ளது. அதன் அருகே வாழைச்சேனை பொதுமயானம் உள்ளது.

**யூனியன் கொலணி :-**

வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதியில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தையடுத்து இக் கிராமம் அமைந்துள்ள காரணத்தால் யூனியன் கொலணி எனப் பெயர் ஏற்பட்டது.

2012ம் ஆண்டு கோறளைப்பற்று கிராமசேவையாளர்களுக்கான போட்டியில்
**1ம் இடம் திரு. ஜெ. லோபனராஜ்**
**2ம் இடம் திரு. க. கிருஸ்ணகாந்**
**3ம் இடம் திருமதி. சாந்தினி குமாரவேல்** ஆகியோருக்கு எமது வாழ்த்துக்கள்

**கும்புறு மூலை வெம்பு :-**

கிரான் வெம்பு என்றும் பெயர் பெறும், கிரானிலிருந்து மக்கள் அனேகப் பேர் இங்கு குடியேறியுள்ளனர். மரமுந்திரிகை மரங்கள் அதிகம் நிறைந்த கிராமம். கூம்பு வடிவமுடைய முக்கோணச் சந்தி கூம்பு மூலை காலவரையில் கும்புறு மூலையாக மாறியது. இச் சந்தியில் இருந்து ஒரு பாதை கல்குடாவுக்கும் மறுபாதை வாழைச்சேனைக்கும் பிரிந்து செல்கின்றன. கூப்பிடும் மூலை கும்புறுமூலையாகியதும் என்பர். அகோரமான உஷ்ணத்துடன் கூடிய மணல் பாங்கான வெளியினை வெம்பு என்று அழைப்பர் வேம்பு (Margoja) எனப்படும் வேப்பைமரங்கள் உள்ளதனாலும் வெம்பாகியது மாணிக்கபுரம் எனவும் அழைக்கப்படுகிறது. பொ. மாணிக்கவாசகம் (பா.உ) பெயரால் ஏற்பட்டது.

**சுங்கான்கேணி :-**

கேணிகளில் சுங்கான் மீன்கள் உள்ளதால் சுங்கான் கேணியாகியது. சுங்கான் எனப்படும் மருத்துவக்குணமுடைய புல்லினம் நிறைந்த மடுக்கள் இருந்தமையாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். இக் கிராமத்தின் ஒரு பகுதி எழுர்ச்சிக் கிராமமாக அழைக்கப்படுகின்றது.

**கறுவாக்கேணி :-**

கறுவாமரங்கள் காணப்பட்ட கேணியை உடைய பகுதியாகையால் கறுவாக்கேணி எனப் பெயர் பெற்றது.

**கொண்டையன் கேணி :-**

கொண்டையன் என்றும் கறுப்பு நிற எறும்புகள் நிறைந்த கேணி இருந்த காரணத்தாலும் கொண்டைகட்டிய ஒரு முதியவர் வாழ்ந்தாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்பது ஒரு சாராரின் கருத்தாயுள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த பகுதியாதலாலும் காலவரையில் கொண்டையன் கேணி என்பது மறு சாராரின் கருத்து.

**கிண்ணையடி :-**

கிண்ணை மரங்கள் நிறைந்திருந்தமையால் இப் பெயர் ஏற்பட்டது. தற்போது புதிய குடியேற்றத்தின் காரணமாகவும் இதன் ஒரு பகுதி குளக்கோட்டன் கிராமம் என வழங்கப்படுகிறது. இதுவும் புதிய குடியேற்றக் கிராமமே குளக்கோட்டன் என்ற மன்னனின் பெயர் சூட்டப்பட்டிருக்கலாம் எனவும் எண்ணப்படுகிறது.

**முறாவோடை (தமிழ்) :-**

முறாக்கை என்ற ஒருவகை மீனினங்கள் துள்ளித்திருந்த நீரோடை இருந்ததால் அக்காலத்தில் முறாக்கை ஓடையாக இருந்தது. பின்னர் திரிவடைந்து முறாவோடை என மாறியது. எனவும் பிற்காலத்தில் இப்பழக்கம் பெயர் திரிவடைந்து மிறாவோடை எனவும் அழைக்கப்படுகின்றது.

இலங்கையின் வரலாறு மூன்று காலகட்டங்களாக நோக்க முடியும்.

1. கட்டம் :- கி.மு 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 1505 இது மன்னர்கள் ஆட்சிக்காலம்.
2. கட்டம் :- கி.பி 1505 தொடக்கம் கி.பி 1948.02.04ம் திகதி வரை இது அந்நியர் ஆட்சிக்காலம்.
3. கட்டம் :- 1948.02.04ம் திகதி தொடக்கம் இன்று வரை.

## கோறளைப்பற்று மத்தி (முஸ்லீம்) பிரதேச செயலாளர் பிரிவின் ஊரும் பெயரும்

**வாழைச்சேனை (முஸ்லிம்) :-**

இப் பிரதேசத்திற்கு வருகின்ற மக்களை வாழ் இடமளிக்கின்ற படையினர் அல்லது மக்கள் கூட்டத்தினர் இங்கு வாழ்ந்ததால் தான் வாழ்வதற்கு ஏற்றசேனை வாழைச்சேனை என்ற பெயர் வந்ததாக காலஞ்சென்ற இப்பகுதி எழுத்தாளர் வை. அஹமட் கூறுகின்றார். வாழைகள் அதிகம் செய்யப்படும் பிரதேசமாகக் காணப்பட்டதாலும் இப் பெயர் வந்திருக்கலாம் என கூறப்படுகின்றது.

**மாவடிச்சேனை :-**

இப் பிரதேசம் ஓட்டமாவடி வாழைச்சேனை ஆகிய பகுதிகளை அண்டிக் காணப்படுவதால் ஓட்டமாவடி என்பதால் வரும் மாவடி என்ற பெயரும் வாழைச்சேனையில் சேனை என்ற பெயரும் இணைந்து மாவடிச்சேனை என்று ஊரின் பெயர் வந்ததாகக் கூறப்படுகின்றது.

**செம்மண் ஓடை :-**

இப்பிரதேசம் நீரோடைகளைக் கொண்டு காணப்படுவதுடன் இவ்வோடைகளை அண்டிய மணல் பிரதேசங்கள் செந்நிறமாகக் காணப்பட்டதாலும் இதன் காரணமாக செம்மண் ஓடை எனப் பெயர் பெற்றது.

**ஹிஜ்ராநகர் :-**

நாவலடிச் சந்தி பிரதேசத்தில் உள்ள ஊர். அமரர். ஜனாப், ஆர். முஹம்மது போக்குவரத்து அமைச்சராக இருந்தபோது இஸ்லாமிய ஆண்டான ஹிஜ்ரி ஆண்டை நினைவு கூறும் முகமாக ஹிஜ்ரா ரயில் கிழக்கு மாகாண போக்கு வரத்துக்கு அனுப்பப்பட்டதால் அதனை முன்னோடியாகக் கொண்டு இப்பிரதேசம் ஹிஜ்ரா நகர் என அழைக்கப்பட்டது.

**மதினா நகர் :-**

மக்கா நகரிலிருந்து நபிகள் எதிரிகளின் தடைகளை மீறி மதீனா நகர் சென்று இஸ்லாமிய சமய பேரரசினை தோற்றுவித்தார். இங்கு தான் நபிகளின் அடக்கஸ்தலம் உள்ளது. அவ் நகரை நினைவு கூறும் முகமாக அமைக்கப்பட்டது.

**அறபா நகர் :-**

உலகில் முதன் முதல் உருவாக்கப்பட்ட இறை இல்லமான கல்பத்துல்லா பள்ளிவாசல் உருவாக்கப்பட்ட நகரை குறிக்கும் அதை நினைவு கூறும் முகமாக அமைக்கப்பட்டது.

**தியாவெட்டுவான் :-**

நீர்தேங்கி நின்ற படியால் வான்கள் காணப்படுவதுடன் வானை சுற்றிய பகுதிகள் வெட்டையாக காணப்படுவதனாலும் தியாவட்டவான் எனும் பெயர் பெற்றது என்பர்.

**பிறைந்துறைச்சேனை :-**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இப்பிரதேசத்தில் ஆங்கிலேய அரச அதிகாரியாக பிறைன் என்பவர் நியமிக்கப்பட்டு இருந்தார். அவர் அம்மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஓர் அதிகாரியாக செயற்பட்டதனால் அம்மக்கள் அவரை கௌரவமாக பிறைன்துரை என அழைத்தனர் அத்துடன் ஏனைய பிரதேச மக்களால் அப்பிரதேச மக்களை பிறைன் துரையின் சேனை (மக்கள் கூட்டம்) என அழைக்கப்பட்டனர் எனவும் பிறைன்துரை சேனையினை ஆட்கள் கொண்டு செய்த இடம் எனவும் கருதப்படுகின்றது.

**பாலக்காட்டு வெட்டை / பாலை நகர் :-**

ஆரம்பகாலங்களில் இங்கு பாலைமரங்கள் ஏராளமாக நின்றன காலப்போக்கில் அவை வெட்டி அழிக்கப்பட்டதன் பின்னர் பாலை நகர் என அழைக்கப்பட்டது. காலஞ்சென்ற பா. உ. முகைதீன் அப்துல் காதர் இப் பெயரை சூட்டியது குறிப்பிடத்தக்கது.

## கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஊரும் பெயரும்

**காவத்தமுனை :-**

இப்பிரதேசம் ஒரு முனைப்பகுதியான காட்டுவழிப் பயணத்தின் பிரதான வழியாகும். ஓட்டமாவடி பெரிய பள்ளிவாசலை கட்டுவதற்கு பாரிய மரங்களைக் காவிச் சுமந்து கொண்டு வரும் போது வண்டியில் கட்டியிருந்த திருக்குகயிறு அறுந்து மரங்கள் விழுந்துவிட்டன இதனால் அந்த இடம் காவு அறுந்த முனை என அழைக்கப்பட்டு பின்னர் காவத்தமுனை எனத் திரிபுபட்டு அழைக்கப்படலாயிற்று. இப்பிரதேசத்திலுள்ளவர்களில் அநேகமானோர் மரவியாபாரிகளாக இன்றும் காணப்படுகின்றனர்.

ஆங்கிலேயர் காலத்தில் நெல் காயவைத்துக் கொண்டிருந்த ஒரு தாய் காகம் நெல்லைத்தின்ற போது தன் மகளிடம் அதைத்துரத்து மகள் என்றதாகவும் எதம்மா என்று மகள் கேட்க காவத்த மண என்று தாய் கூறியதாகவும் அப்பொழுது அங்கு ஊரின் பெயரை விசாரித்துக் கொண்டிருந்த வெள்ளைக்காரனுக்கு இது தான் அவ்வூரின் பெயராக இருக்குமோ என நினைத்து காவத்தமன் என்ற பெயர் நாளடைவில் காவத்தமுனை என்றாகியது என்பதும் ஒரு சாரரின் கருத்தாயுள்ளது. மனே என்பது தமிழ்மக்களால் தம் பிள்ளைகளை அழைக்கும் செல்லப் பெயராகவும் மன என்பது முஸ்லிம் மக்களால் தம் பிள்ளைகளை அழைக்கும் செல்லப் பெயராகவும் இப் பகுதியின் வழக்காயுள்ளது. புதுவெளி என்று ஒரு பெயரும் உள்ளது.

**காகிதநகர் :-**

கடதாசி ஆலை இங்கு இயங்கிவருவதால் இப் பிரதேசம் காகிதநகர் என அழைக்கப்படுகிறது. காவத்த முனையில் இக் காகித ஆலை உள்ளது. இங்குள்ள புகையிரத நிலையத்திற்கே இப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**ஓட்டமாவடி :-**

இப்பிரதேசத்தில் பிரதான அடையாளம் காட்டக் கூடிய பெரிய ஓட்டையுடன் மாமரம் ஒன்று இருந்ததால் ஓட்டு மாவடி என பெயர் வழங்கப்பட்டதாகவும் பின்னர் அதில் ஓட்டைகள் காணப்பட்ட போது ஓட்டமாவடி என அழைக்கப்பட்டது என்பர். வேறு ஒரு வழக்கில் நோக்கின் ஆங்கிலேயர் இரு பெண்களிடம் இவ்வூர் பற்றி தங்களின் மொழியில் விசாரித்தபோது அச்சமடைந்த அப் பெண்களில் ஒருத்தி மற்றப் பெண்ணை தனது கிராம மொழி வழக்கில் ஓட்டமா வாடி என அழைக்க அதுவே அவ் வெள்ளையரால் ஊரின் பெயராக கொள்ளப்பட்டது என்பர்.

**ரிதிதென்ன :-**

1990ம் ஆண்டு வன்செயல் பின்னர் ஜெயந்தியா ஏறாவூரில் இருந்து குடி பெயர்த்தவர்களில் புதிய குடியேற்றம்.

**காரமுனை :-**

முனைப்பகுதியில் கார மரங்கள் காணப்பட்டமையால் ஏற்பட்டபெயர்.

இவை தவிர முஸ்லிம் கிராமங்களாக கள்ளிச்சை, புணானை என்பனவும் உள்ளன இவை தமிழ் கிராம சேவையின் பிரிவுக்குள்ளும் உள்ளடக்கப்படும்.

> இலங்கையின் வரலாற்றில் 1வது காலகட்டத்தில் மன்னர் ஆட்சிக்காலத்தில் தலைநகரங்களாக பெருமளவு காணப்பட்டது. பெருமளவு குளங்களை அண்டிய வயல்பிரதேசங்களும் நதிகளை அண்டிய பிரதேசங்களுமே உதாரணமாக:- கொக்கட்டிச்சோலை, உன்னிச்சை, பன்குடாவெளி போன்றன காணப்பட்டன. இன்றைய நிலையில் இவை கிராமங்களாகக் காணப்பட்ட போதிலும் இவை ஒரு காலப்பகுதியில் நகரங்களாகவே காணப்பட்டன. இவற்றிலிருந்து புலம்பெயர்ந்தவர்களே பெரும்பாலும் தற்போது நகரமெனக் கருதப்படும் இடங்களில் வாழ்கின்றனர்.

## கோறளைப் பற்றுத் தெற்கு (கிரான்) பிரதேச செயலாளர் பிரிவின் ஊரும் பெயரும்

**கிரான் :-**

கிரான் எனப்படும் ஒருவகைப் புல் இப்பிரதேசத்தில் நிறைந்திருந்தமையால் அப்பெயர் ஏற்பட்டது.

**பறங்கியா மடு :-**

கிரானின் கிழக்குப் பக்கமாக கொழும்பு - மட்டக்களப்பு புகையிரதப் பாதை வரையுள்ள ஒரு புதிய குடியேற்றக்கிராமம். புகையிரதப்பாதையை அண்டிய மணல் பிரதேசத்தில் மாட்டுவண்டி நின்ற தடம்போல் ஒரு நீளமான கறுத்த மண்ணுடன் கூடிய பகுதி காணப்படுகின்றது. இதனை இப் பகுதி மக்கள் தேரோடிய வெம்பு அல்லது தேரோடிய வெட்டை என அழைக்கின்றனர். இராவணன் சீதையைக் கவர்ந்து சிறைப்பிடித்து தனது தேரில் ஏற்றிக்கொண்டு இவ்வழியால்தான் வந்ததாக இப்பகுதி மக்கள் மத்தியில் ஓர் ஐதீகமான கதை உலாவுகின்றது. பறங்கி என்ற இனத்தின் பெயராலோ அல்லது பறங்கிக் கிழங்கின் பெயராலோ இங்குள்ள மடுவிற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது.

**கோரக்கல்லி மடு :-**

கோரைப்புற்களும், (கோரை) கள்ளி எனப்படும் பாலுள்ள ஒரு முட்செடியும் காணப்பட்டதினால் இரண்டினையும் இணைத்து கோரை + கள்ளி = கோரைக்கள்ளி என வழங்கப்பட்டு பின்னர் கோரைக்கல்லி மடு ஆகியது எனலாம்.

**சந்திவெளி :-**

படுவான்கரைக் கிராமங்களில் திமிலர்கள், முக்குகர்கள் போன்ற சாதியினர் வாழ்ந்து வந்தனர். திமிலர்கள் செய்த கொடுமைகளைத் தாங்க முடியாது முக்குகர்கள் பட்டாணியருடன் சேர்ந்து அவர்களை வெருகல் ஆற்றிற்கு அப்பால் துரத்திச் சென்று விட்டு விட்டு வரும் வழியில் அனைவரும் சந்தித்த இடமாக இவ்விடம் அமைந்ததால் சந்திவெளி எனப் பெயர்பெறக் காரணமாயிற்று. இப்பகுதியில் உள்ள காணி உறுதிகள் தடயங்கள் ஆகியவற்றில் இருந்து 18ம் நூற்றாண்டில் இச்சம்பவங்கள் நடந்திருக்கலாம் என அறியமுடிகின்றது.

**முறக்கொண்டான்சேனை :-**

இங்கு சுளகு (முறம்) தயாரிக்கும் கொட்டான் ஆள் ஒருவர் இருந்திருக்கிறார். முறம்+ கொட்டான் இணைந்தே முறக்கொட்டான் ஆகியிருக்கலாம் எனவும் திமிலரைத் துரத்திச் சென்ற முக்குகர்களும், பட்டாணிகளும் சேர்ந்து இவ்விடத்தில் வெற்றியினைக் கொண்டாடும் முகமாகவும் வெற்றி முரசு கொட்டியதன் காரணமாகவும் முறக்கொட்டான் சேனை எனப் பெயர் வந்திருக்கலாம் என ஒரு சாராரும், முடக்கொத்தான் எனப்படும் மூலிகைச் செடிகள் இங்கு அதிகம் காணப்பட்டதன் காரணமாக முடக்கொத்தான்சேனை முறக்கொட்டான் சேனை ஆகியிருக்கலாம் என ஒரு சாராரும் கூறுவது அவதானிக்கத் தக்கதே.

**விசன் கேணி :-**

கிரானின் கிழக்குப் புறமாக பறங்கியாமடுவுடன் இணைந்ததாக இக்கிராமம் உள்ளது. இது ஒரு பள்ளச்சார்பான ஒரு பகுதி. (தாழ்நிலப்பரப்பு) இங்குள்ள கேணிகளில் சுங்கான், கெழுத்தி போன்ற விஷமுள்ள முட்களையுடைய மீன்கள் இருந்தமையால் விசம் கேணி என்பது காலவரையில் விசன்கேணி ஆகியிருக்கலாம்.

**தேவபுரம் :-**

முறக்கொட்டான் சேனைக்குக் கிழக்குப்புறமாக புகையிரத நிலையத்திற்கு அப்பால் உள்ள இப்பிரதேசம் தேவபுரம் என அழைக்கப்படுகின்றது. காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கே. டபிளியூ தேவநாயகத்தின் பெயரால் தற்போது இக்கிராமம் இப் பெயர்பெற்றுள்ளது. இக்கிராமத்தில் உள்ள இந்து கிறிஸ்தவஆயங்களின் மூலம் தேவ அனுக்கிரகம் பெற்ற கிராமமாக இருப்பதாலும் இப்பெயர் ஏற்பட்டது என ஒரு சிலரின் கருத்தாய் உள்ளது.

**பாலையடித்தோணா :-**

இதுவும் முறக்கொண்டான் சேனைக்குக் கிழக்குப்புறமாக உள்ள தோணாக்கள் பலவுள்ள ஒரு கிராமமாகும். பாலை மரமொன்று ஓரமாக நின்ற தோணாவின் பெயரில் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும், பாலைநிலத்துக்குரிய மணல் தரையில் பல தோணாக்கள் இருந்தமையால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருத இடமுண்டு.

**புலிபாய்ந்த கல் :-**

கிரானின் மேற்காக வடக்குத் தெற்காக ஓடிச் செல்லும் ஆற்றின் (மதுறுஓயாவின் கிளை) மேற்குப் பிரதேசப் படுவான்கரை கிராமங்கள் பலவற்றில் முன்னுள்ள ஒரு வயல் கிராமம் புலி பாய்ந்த கல் எனப்படுகின்றது. இங்குள்ள பாலத்தின் அருகில் குட்டை குட்டையான கற்கள் உள்ளன. பாலம் கட்டுவதற்கு முன்னர் புலி ஒன்று இக்கல்லின் மேலாகப் பாய்ந்து பாய்ந்து அக்கரை சென்றதாகக் கூறப்படுகின்றது.

**கோரா வெளி :-**

புலிபாய்ந்த கல்லின் மேற்காக உள்ள பிரதேசம் கோராவெளிக் கிராமம். அகோரவெப்பத்தின் காரணமாக அகோரவெளி என இடத்தின் பெயர் கோரைவெளியாக மாறியது. இங்கு கண்ணகி அம்மன் ஆலயம் உள்ளது. வைகாசிப் பொங்கல் எனப்படும் சடங்கு இங்கு நடைபெறும் ஏழு கிராமத்தவர்களால் நடாத்தப்படுகின்றது. கோராவல்லி என்கின்ற வேடுவப் பெண் வாழ்ந்ததாலும், கண்ணகிக்கு மதுரையை எரித்த காரணத்தால் கோராவள்ளி என்ற ஒரு பெயரும் உள்ளதென்பதும் அறிவியலாளர்களின் கருத்தாய் உள்ளது. இலுப்பை மரம் நின்ற ஒரு வயல்பகுதி இலுப்பயடி முன்மாரியாகியது. அது கோராவள்ளியின் அயல்பகுதி ஈச்சையடி. கோராவெளியை அண்டிய வயல் கிராமம் ஈச்சைமரங்கள் நின்ற காரணத்தினால் ஈச்சையடி எனப் பெயர் பெற்றது.

**கானாந்தனை :-**

கட்டையடிமடு, அம்புஸ்குடா, கானபாந்தனை, என்ற பல பெயர்கள் உடைய வயல் பிரதேசம். மாதுறு ஓயா ஆறு, இப்பிரதேசத்தை ஊடறுத்து ஓடுகிறது. கட்டையடித்த மடு கானாங்குருவிகள் அதிகமாய் உள்ள பிரதேசம். போராளி இயக்கங்கள் மறைந்திருந்த இடம் ஆகிய காரணப்பெயர்களாயுடையது. (**Ambush**) மினுமினுத்தவெளி, கல்லடிவெட்டை என்பனவெல்லாம். இதன் பெயர்களே.

**தடானை :-**

கிரான் - மீயான்குளம் காட்டுப்பாதையில் உள்ள கிராமம் வயல்பிரதேசம். யானைகள் சென்ற கால்தடங்கள் காணப்படும் இடமாகையால் தடானை (யானைத்தடம்) ஆகியது.

**கெக்கிளாச்சோலை :-**

கெக்கிளாப்பழம் பழுக்கும் கெக்கிழாக்கொடி எனப்படும் முட்செடிகள் நிறைந்திருந்த வயல்பிரதேசம் இங்கு மந்தை வளர்ப்பும் அதிகமாய் உள்ளன.

**கூளாவடி :-**

கிரான் - மீயான்கல்குளம் காட்டுப் பாதையில் உள்ள வயல் கிராமம் கூழாமரம் ஒன்று நின்றதனால் கூளாவடி எனப்பெயர் பெற்றது.

**பேரில்லாவெளி :-**

வயல்வெளிகள் நிறைந்த பிரதேசம். எந்தப் பெயர்களும் இதற்குச் சூட்டப்படாததனால் பேரில்லா வெளி எனப் பெயர்பெற்றுள்ளது.

**முறுத்தானை :-**

வயது முதிர்ந்த கிழட்டு யானைகள் நிறைந்திருந்தமையால் முறுத்தானை எனப் பெயர் பெற்றது.

**வெள்ளாமைச்சேனை :-**

இப்பிரதேசம் வேளாண்மை, சிறு சேனைப்பயிர்ச்செய்கையுமாகக் காணப்பட்டதனால் இப் பெயர் ஏற்பட்டது. காகித ஆலையின் வைக்கோல் கொள்வனவு நிலையம் இங்கு அமைந்திருந்தது.

**மொட்டப்புல் தோட்டம் :-**

பசளை அற்ற தரிசு நிலத்தில், மொட்டைப் புற்கள் வளர்ந்திருந்தமையால் மொட்டைப்புல் தோட்டம் எனப் பெயர் பெற்றது இப்பிரதேசம்.

**தரவை :**

எதுவித பயிர் பச்சைகளுமற்ற வெட்டையாகக் கிடக்கும் கட்டாந் தரையாகக் காணப்பட்டதால் தரவை எனப் பெயர் பெற்றது. கால்நடைவளர்ப்பிலும் பிரசித்தமான பிரதேசம். கிரான் மீயான்குளம் பாதையில் ஏழாம் கட்டையில் உள்ளது.

**ஒன்பதாம் கட்டையும் குடும்பிமலையும் :-**

ஒன்பதாம் கட்டை ஒரு காட்டுப் பிரதேச சந்தியாய் உள்ளது. மேற்காக குடும்பி மலைக்கும் கிழக்காக அலியா ஓடைக்கும் தெற்காக மீயாங்கல்லுக்கும் பாதைகள் செல்கின்றன. மலையின் உச்சம் குடும்பி போன்ற அமைப்பில் உள்ளதால் குடும்பிமலை எனப்பட்டது. சிங்களவர்களால் இம்மலை தொப்பிகல எனப்படுகின்றது. இலங்கை வரைபடத்தால் பரன்ஸ்கப் **(Barrance Cap)** என்ற பெயரால் உள்ளது. வனத் திணைக்களத்திற்குச் சொந்தமான காட்டு வளர்ப்புப் பகுதியும் மிருகங்களுக்காக ஒதுக்கப்பட்ட காட்டுப்பகுதியும் உள்ளன. மலையின் உச்சியில் பிள்ளையார் கோவிலும் மலை அடிவாரத்தில் மாரியம்மன் கோவிலும் உள்ளன. இந்த மலையில் பாரிய கற்குகை உள்ளது. (பாரன்ஸ் என்ற ஆங்கிலத் தேசாதிபதியின் தொப்பிபோல் உள்ளதால் பாரன்ஸ் கப் எனப்பட்டது.)

**திகிலிவெட்டை :-**

சந்திவெளிக் கிராமத்திற்கு மேற்காக ஆற்றுக்கு அப்பால் உள்ள கிராமம் திகிலிவெட்டை ஆகும். ஆற்றினால் சூழப்பட்டு, மேடுகளும், மலைத்தொடர்களும் நிலப்பரப்பில் பீலி போன்ற நீர்ஊற்றுக்களும் காணப்பட்டதால் பீலி வெட்டை என்பது திரிந்து திகிலிவெட்டை ஆகியது. இதனை அடுத்துள்ள கிராமங்கள் வவுணக்குடா, நாவலம்பட்டி, கற்பொக்குணை ஆகியன.

**அலியா ஓடை :-**

யானைகள் இங்குள்ள நீரோடைகளில் திரிவதனால் இப் பெயர் ஏற்பட்டது. அலியா என்பது சிங்களத்தில் யானைகளின் பெயராகவுள்ளது. இங்கு அரச நிறுவனங்களின் ஐம்பது வீட்டுத்திட்டம் உள்ளன.

**மீயான் கல் குளம் :-**

காட்டு எலிகள் நிறைந்த பகுதியாகவும் குளம்உள்ள பிரதேசம் ஆகையால் இப்பெயர் ஏற்பட்டது. மெய்யன் என்பவனின் பெயராலும் அவனிருந்த கல்பகுதியினை மையமாகக் கொண்டு மெய்யன்கல் குளம் மீயான்கல் குளமாக மாறியது எனவும் கூறப்படுகின்றது.

**சிறுத்தயன் கல் :-**

சிறுத்தைப் புலிகள் நடமாடிய கற்களையுடைய பிரதேசம் ஆகையால் சிறுத்தைக்கல் பிரதேசம் காலவரையில் சிறுத்தயன் கல்லாகியது.

**கல்லூத்துக் குடா :-**

கல்மலையில் இருந்து நீர் ஊற்று வெளிப்பட்டு ஓடியதால் இப்பகுதி கல்லூத்துக்குடா என அழைக்கப்பட்டது. விவசாயிகளும் சிறுசேனைப் பயிர் செய்கையாளர்களும் உள்ளனர்.

**பள்ளத்துச்சேனை :-**

பள்ளநிலப் பிரதேசத்தில் (தாழ்நிலம்) சேனைப்பயிர்கள் செய்யப்பட்டிருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது.

**இலுமிச்சையடி :-**

எலுமிச்சை மரம் ஒன்று இப்பகுதியில் பூத்துக் காய்த்து நின்றதால் இக்கிராமம் எலுமிச்சையடியாகி இலுமிச்சையாகியது.

**மீரானக்கடவை :-**

இப்பிரதேசத்தில் ஒரு குளம் உள்ளது. வீரன் என்ற பெயருடைய ஒருவர் மரங்களைப்போட்டு கடந்து சென்றதால் வீரானின் கடவை என்பது வீரானக்கடவையாகி பின்னர் மீரானக்கடவை ஆகியது.

**மாதவணை :-**

தமனை மரங்கள் அதிகமாகக் காணப்பட்ட பகுதி (பெரியதமனை) எனப்பட்டது. கால்நடை வளர்ப்பில் சம்பந்தப்பட்ட சித்தாண்டி, வந்தாறுமூலைக் கிராமத்தவர்கள் மாட்டு வண்டிகளை இங்கு வைத்துள்ளனர். இப்பிரதேசத்தின் மேற்குப் பக்கம் விந்தனைப்பற்றுப் பகுதியைச் சேர்ந்த பதுளை மாவட்டமாகும். மிருகங்களைக் கொண்டு வேட்டையாடுபவர்கள் இப்பிரதேசத்திற்கு வேட்டையின் நிமித்தம் செல்வர்.

**ஊத்துச்சேனை :-**

இங்குள்ளவர்களின் மரவள்ளிச்சேனை ஊத்துக்காரணமாக நீர்தேங்கி நின்று ஊற்றுப்பிடித்து நாசமடைந்ததால் ஊத்துச்சேனையாகியது. ஊற்று நீரைக்கொண்டு சேனைகள் செய்ததால் ஏற்பட்ட பெயர் எனவும் கொள்ளப்படுகின்றது.

**வடமுனை :-**

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குப் பிரதேசமாய் உள்ளதால் அரச அதிகாரிகளால் வடமுனை என்று சூட்டப்பட்டது.

**கள்ளிச்சை :-**

கள்ளி மரங்கள் நின்ற பிரதேசம் ஆகையால் இப்பெயர் ஏற்பட்டது. வயல் பிரதேசம் - கள்ளிச்சை வடமுனை எனவும் பெயர் பெறுகின்றது.

**பொண்டுகள் சேனை :-**

பெண்கள் காடுவெட்டிச் சேனைப்பயிர் செய்ததால் ஏற்பட்ட பெயர். சிறு தானியங்கள் இப்பிரதேசத்தில் பயிரிடப்பட்டது. இதனால் பெண்டுகள் சேனை பொண்டுகள் சேனை ஆகியது.

**பூலாக்காடு :-**

கூளாமரங்கள் நிறைந்திருந்த காடாகவிருந்ததால் இப்பெயர் ஏற்பட்டது. காலப்போக்கில் அது மருவி கூளாமரம் பூலாமரமாகி பூலாக்காடாக மாறியது.

**முறுக்கன் தீவு :-**

முருங்கை மரங்கள் அதிகம் நின்றதீவு முருங்கன் தீவாயிருந்து முறுக்கன் தீவாகியது.

**பிரம்படித்தீவு :-**

பிரம்புச் செடிகள் அதிகமாக நின்றதனால் பிரம்படித்தீவாகியது.

**ஆனை சுட்ட பொத்தானை :-**

சேனை வாடிகளில் உள்ள ஓலை மட்டைகளை அடித்து உடைத்து பொத்தலாக்கிய யானை ஒன்று உலாவியதால் பொத்தானை என்ற பெயரும் அது சுட்டுக் கொல்லப்பட்டதன் பின்னர் ஆனை சுட்ட பொத்தானை என்றும் கூறப்படுகின்றது.

**சாராவெளி :-**

இவ்வயல் பிரதேசங்களில் உள்ள வேலிகள் காட்டுக்கட்டைகளை அடுக்கி கட்டப்பட்டதால் சரவேலி என்பது சாராவெளியாகியது.

**கருங்காலியடிச்சேனை :-**

கருங்காலி மரங்கள் நின்றிருந்த இடம் இப்பெயர் பெற்றது. இதனை அடுத்த கிராமம் செட்டியார் குடியிருப்பு எனப்பட்டது. செட்டியார் ஒருவர் இங்கு குடியிருந்தார்.

**வாகநேரி :-**

இயற்கையான ஊற்றுக்களையும், நீர்ஏரிகளையும் கொண்டதாகவிருந்தது. பெரிய நீர்ப்பாசனக் குளம் ஒன்று உள்ளது. கடதாசி ஆலைக்கு நீர் வழங்கும் பம்ஹவுஸ் இங்குள்ளது. இங்குள்ள ஒரு மலையில் சுற்றுலா விடுதியும் உள்ளது.

**பொட்டக் குளம் :-**

சிறிய மடுவளவில் ஒரு குளம் உள்ளதாலும், இக்குளத்தின் மூலம் எதுவித நீர்ப்பாசனமும் நடைபெறாத காரணத்தினாலும் இதனைப் பொட்டக் குளம் என்று அழைத்தனர்.

**குளத்து மடு :-**

பொட்டக்குளம் மாதிரித்தான் இங்குள்ள ஒருமடுவும், அதனைச் சூழவுள்ள வயல் வாடிகளும் சேர்ந்து குளத்துமடுக் கிராமமாக மாறியது.

**குடமுனைக் கல் :-**

ஒரு குடாவில் உள்ள ஒருகல்லின் பெயரால் இப்பகுதி குடமுனைக்கல் ஆகியது. இதுவும் வயற்பிரதேசம்.

**முள்ளி வட்டவான் :-**

முட்கள் நிறைந்த நீர்நிலை வாய்க்கால்களையுடைய வயற்பிரதேசம் முள்ளிவட்டவான் ஆகியது. அணைக்கட்டு வீதியில் இப்பகுதி உள்ளது.

**சாலம்பச்சேனை :-**

சாளம்பை மரங்கள் உள்ள பிரதேசம் சாலம்பைச்சேனை ஆகியது. புணானைக்கு கிழக்காக உள்ள பிரதேசம்.

**மயிலந்தனை :-**

மயிலன் என்ற ஒருவர் வசித்த பகுதி ஆகையாலும், மயில்கள் அதிகம் உள்ள பகுதியாக இருந்தமையாலும் இப் பெயர் பெற்றது. இது ஒரு குடியேற்றக் கிராமம். தற்போது அழிந்த கிராமமாயுள்ளது. வன்செயல்கள் காரணமாக 32பேர் கொல்லப்பட்டு பின்னர் கைவிடப்பட்ட கிராமமாய் உள்ளது. தற்போது மீள்குடியேற்றம் நடைபெற்றுள்ளது. புணானை புகையிரத நிலையத்திற்கு மேற்காக உள்ளது.

## ஏறாவூர் பற்று செங்கலடிப் பிரதேச செயலாளர் பிரிவு ஊரும் பெயரும்

**சித்தாண்டி :-**

சித்து விளையாட்டுக்களைச் செய்து வந்த ஆண்டி ஒருவரின் பெயரின் காரணமாக இப் பெயர் பெற்றது. சிறிய ஆண்டி ஒருவர் வாழ்ந்ததனாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். (சிறிய + ஆண்டி = சித்தாண்டி) என அழைக்கப்பட்டு சித்தாண்டியாகியது.

**மாவடிவேம்பு :-**

காட்டு மாமரங்கள் நிறைந்து நின்றதனால் மாவடி வேம்பு ஆகியது. அதி உஷ்ணமுடைய மணல்பாங்கான பற்றைகள் நிறைந்த காட்டுப்பிரதேசம் வேம்பு எனப்பட்டது. அதனால் மாவடிவேம்பு என்பதே சரியான பெயராகும்.

**பலாச்சோலை :-**

பலாமரங்கள் அதிகமாக நின்ற சோலைபோன்ற பிரதேசம் பலாச்சோலை ஆகியது.

**களுவன்கேணி :-**

களுவன், பழுவன் என இரு வேடுவர்கள் அண்ணன், தம்பியாக வாழ்ந்து வந்தனர். பழுவன் அவனது தங்கையாகிய களுவஞ்சியுடன் தென்பகுதியான களுவாஞ்சிக்குடியில் சென்று களுவஞ்சி அங்குவாழ, கழுவன் பழுகாமம் சென்று ஆட்சி புரிந்ததாய் வரலாறு உள்ளது. களுவன் ஆட்சி செய்த பிரதேசம் களுவன்கேணியாகியது. கேணிகளும், தோணாக்களும் உடைய பிரதேசம் கேணியாகியது.

**வந்தாறுமூலை :-**

பாட்டாணியரின் உதவியுடன் திமிலர்களைத் துரத்தியடித்த முக்குவர்கள் மேற்காகவும், பட்டணியர் வடக்காகவும் சென்று விரட்டியடித்துவிட்டு இருகுழுக்களும் சந்தித்து ஓய்வெடுத்த பிரதேசம் வந்தாறுமூலை ஆகியது. மதுரையை எரித்து விட்டு வந்த கண்ணகி இவ்விடத்தில் வந்து ஆறியிருந்ததாலும் இப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

**கொம்மாதுறை :-**

ஏறாவூர் நகரை ஆண்ட நல்லியற்கோடனின் பட்டத்து யானையாகிய கொம்பன்யானை தினமும் இப்பகுதியில் உள்ள துறையில் நீராடிவந்தது. (கொம்பன் + துறை) கொம்மாதுறையாகியது.

**செங்கலடி :-**

மட்டக்களப்பிற்குச் செங்கல் விநியோகிக்கும் ஒரு பகுதியாக இப்பிரதேசம் இருந்தமையால் இப்பெயர் ஏற்பட்டது. செங்கல் வாடி செங்கலடியாயிற்று.

**ஐயன்கேணி :-**

ஒருமுழச்சோலை என்னும் இடத்தில் தூர்ந்து கிடந்த கேணியின் பெயரால் இக்கிராமத்திற்கு இப் பெயர் ஏற்பட்டது. இக்கேணிக்கு அருகாமையில் ஐயனார் தெய்வவழிபாடு இருந்த காரணத்தாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**கொடுவாமடு :-**

கொடுவா மீன்கள் நிறைந்திருந்த மடுக்கள் காணப்பட்ட காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது. தம்பான்வெளி காயான்குடா எனவும் பெயர் பெறுகின்றது. இக்கிராமம் காகித ஆலையில் வைக்கோல் சேகரிப்பு நிலையம் இருக்கின்றது.

**பங்குடாவெளி :-**

பாய் இழைப்பதற்கான பன்புற்கள் இங்கு ஏராளமாகக் காணப்பட்டன. அத்துடன் உப்பாற்றுப் பிரதேசம் குடாபோன்று இருந்தமையாலும் இரண்டும் சேர்ந்து பன்குடாவெளி ஆகியது. இப்பிரதேசத்தின் சிற்றரசன் எதனையும் மக்களுக்கு பங்கிட்டு வழங்காதிருந்ததாலும் பங்கிடாவெளி - பங்குடாவெளியாகியது என ஒரு சாராரும் குறிப்பிடுகின்றனர்.

**இலுப்படிச்சேனை :-**

இலுப்பை மரங்கள் இப்பகுதியில் அதிகமாகக் காணப்பட்டமையால் இப்பெயர் ஏற்பட்டது. இது ஒரு சந்தியாக உள்ளது. சந்தியிலிருந்து வடக்காக ஒரு காட்டுப்பாதை திறக்கப்பட்டு தரவையூடாகச் சென்று புலிபாய்ந்த பாலத்தை அடைகின்றது.

**வேப்பவட்டுவான் :-**

வேம்பு மரங்கள் (வேப்பை) நிறைந்திருந்த பிரதேசமாக இருந்தமையாலும் நீரோடைகள் நிறைந்திருந்தமையாலும் இப்பெயர் ஏற்பட்டது. செங்கல் வாடிகள் இங்கு உள்ளன.

**கரடியனாறு :-**

இப்பகுதியை கரடியன் என்ற வேடன் தனது ஆட்சிக்கு உட்படுத்தி ஆண்டு வந்தான். ஆற்றுப்பகுதியாக உள்ளதாலும் இவையிரண்டும் இணைந்து கரடியனாறு ஆகியது. ஆற்றில் கரடிகள் நீர் அருந்தியதாலும் இப் பெயர் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

**கித்துள்வெவ :-**

கித்துள் மரங்கள் நிறைந்த இடம் மேலும் குளம் காணப்பட்டது.

**கோப்பாவெளி :-**

வயல் செய்யும் காலங்களில் இப்பகுதியில் உள்ள புல்வெளிகள் மாடுகள் மேய்ப்பதற்காக உபயோகிக்கப்பட்டன. கோ என்பது பசுமாடு பசுமாடுகள் மேயும் பிரதேசமாக இருந்த காரணத்தால் இப் பெயர் பெற்றது. இக்கிராமத்தின் தென்மேல் பகுதியில் வெலிகண்டி என்றொரு குளமும் வயல்பிரதேசங்களும் உள்ளன. தும்பால மரங்கள் நின்றதனால் தும்பாலஞ்சோலை என்றொரு பெயரும் உள்ளது. வனத்திணைக்களத்தின் நாற்றுமேடை இங்கு நடப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

**புல்லு மலை :-**

சம தரையாக இல்லாது மலைப்பாங்காகவும், புற்களுடனும் காணப்பட்டதால் புல்லுமலை எனவும் பெரிய புல்லினங்கள் நின்றதால் பெரியபுல்லுமலை என அழைக்கப்பட்டது.

**ஈரளக்குளம் :-**

இரு பெரிய அணைக்கட்டுக்களை உடைய குளம் இருப்பதனால் இவ் இரண்டு அணைக்கட்டுகளுக்கும் ஈரணையாக பெயர் குறிப்பிடப்பட்டு பின்னர் ஈரளக்குளமாகியது.

**மயிலவட்டவான் :-**

அடர்ந்த காடுகளையும், மயிலினங்களையும் உடையதாக இருந்த பிரதேசம் மயிலவட்டவான் எனப்பட்டது.

**மரப்பாலம் :-**

மட்டக்களப்பு - பதுளை பிரதானவீதியில் இருந்த பாலம் மரக்கட்டைகளால் போடப்பட்டிருந்தமையால் இவ்விடம் மரப்பாலம் எனப்பட்டது. இக்கிராமம் ஓர் குடியேற்றக் கிராமம் ஆகும். பா.உ.பொ.மாணிக்கவாசகரினால் மரப்பாலம் திருத்தியமைக்கப்பட்டது.

**உறுகாமம் :-**

பன்றிகள் அதிகமாக திரிந்த ஊர் ஆகும்.

**எல்லைநகர் :-**

ஏறாவூர் நகர பிரதேச சபைக்கும், ஏறாவூர்பற்று பிரதேச சபைக்கும் எல்லையில் அமைந்திருப்பதால் எல்லை நகர் என அழைக்கப்படுகின்றது. இது இரு பிரதேச சபைக்கும் பொது என்பதனால் இவ்வீதி எக்காலத்திலும் சீர் அமைக்கப்படாது காணப்படுகின்றது.

**சவுக்கடி :-**

சவுக்கு மரங்கள் நடப்பட்டிருந்த பிரதேசம் ஆகையால் சவுக்கடி எனப்பட்டது. இது கடற்கரைப்பிரதேசம் கடலலைகளின் ஓசை சவுக்கால் அடிக்கப்படும் ஓசைபோன்று இருந்ததாலும் இப்பெயர் ஏற்பட்டது.

**தளவாய் :-**

மன்னர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்த காலத்தில் குறுநில மன்னர்கள் ஏறாவூர் பகுதிக்கு விஜயம் செய்வதற்கு கடல்வாவியினை உபயோகப் படுத்தினர். இதனால் தளவாய் எனப்பட்டது. (தளம் என்பது மேடையினைக் குறிக்கும்)

**ஆறுமுகத்தான் குடியிருப்பு :-**

ஆறுமுகப்போடி என்னும் நிலப்பிரபு தன் இன,சனங்களுடன் குடியேறி வாழ்ந்திருந்ததால் இப் பெயர் ஏற்பட்டது.

**தன்னாமுனை :-**

தென்னைமரங்கள் நிறைந்த காணப்பட்டமையாலும், மட்டக்களப்பு வாவியின் ஒரு முனையாக காணப்பட்டதினாலும் இதனை தென்முனை என அழைக்கப்பட்டு பின்னர் தன்னாமுனையாக மாறியது. தன்னார் என்றால் பெரியார் தென்னை முனை என்றும் முனை என்றால் வாவியை ஊடறுத்துக்காணப்படும் கூரிய பகுதி என்றும் பொருள்படும்.

**மயிலம்பாவெளி :-**

பெரிய நிலப்பரப்பைக் குறிப்பது வெளி. ஒரு காலத்தில் மயிலிப்போடி என்பவர் தனது இனசனங்களுடன் குடியேறி வாழ்ந்த காரணத்தினாலும், மயில்கள் நிறைந்து காணப்பட்டதினாலும் இந்துக்கள் மயிலை முருகனின் வாகனமாகவுள்ளது என நினைத்தும், மயில் ஏறும் பெருமான் என வெளி என அழைத்தும் காலவரையில் மயிலம்பாவெளியாகியது.

**குமார வேலியர் கிராமம் :-**

கே.டபிள்யூ தேவநாயகம் கல்குடா பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமாய் இருந்தவேளை அவரது பாட்டனாரின் பெயரால் இக் கிராமத்திற்கு இப் பெயர்சூட்டப்பட்டது.

**பாரதிபுரம் :-**

ஐயங்கேணிக் கிராமசேவகர் பிரிவில் ஒரு சிறு பகுதி. இது நல்லையா பாரதிதாசன் பெயரால் அழைக்கப்படுவதுடன் கவிஞர் பாரதியாரை நினைவு படுத்தும்வகையில் ஏற்படுத்தப்பட்ட கிராமம்

**ரமேஸ்புரம் :-**

இதுவும் செங்கலடிக் கிராமசேவகர் பிரிவில் உள்ள ஒரு குடியேற்றக் கிராமம். வேலப்பன் ரமேஸ் என்ற ஈரோஸ் போராளியின் நினைவாக EROSE இயக்கம் மூலம் அமைச்சர் தேவநாயகம் அவர்களின் காணியினைப் பெற்று ஏற்படுத்தப்பட்ட குடியேற்றம்.

## ஏறாவூர் நகரம் பிரதேச செயலக பிரிவின் ஊரும் பெயரும்

**ஏறாவூர் :-**

நல்லியற்கோடன் என்னும் மன்னன் ஆட்சிக்குட்பட்ட காலத்தில் அவனது பட்டத்து யானை ஏறுக்கு மாறாகத் திரிந்தமையால் இப்பகுதி ஏறாவூர் எனப் பெயர் பெற்றது. மட்டக்களப்பில் திமிலருக்கும் முக்குகருக்கும் ஏற்பட்ட சண்டையில் திமிலரை விரட்ட முக்குகர்கள் அரபு நாட்டுப் பட்டாணியரின் துணையுடன் திமிலரை வெருகல் வரையும் துரத்தியடித்தனர். அதன் பின்னர் திமிலர் மீண்டு வந்து குடியேறாதவகையில் அரண் செய்த ஊராக அமைந்தமையால் ஏறாவூர் எனவும் பெயர் பெற்றது. இப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் ஏறாவூர் பல பிரிவுகளாக 1 / 1A / 1B / 2/ 2A/ 2B/ CB எனப் பல பிரிவுகள் கொண்டது.

**மிச் நகர் (MICH)**

மிச் என்பது *Moor Islamic Cultural Home* என்பதில் வரும் முதல் எழுத்துக்களின் சுருக்கமாகும். இந் நிறுவனத்திலிருந்து பரீட்மீராலெப்பை எம். பி யால் நிதி பெற்று உருவாக்கிய கிராமம் என்பதால் அப் பெயர் சூட்டப்பட்டது.

**மீராகேணி :-**

மீரான் என்பவர் வாழ்ந்த இடத்தின் அருகே கேணி காணப்பட்டமையினால் இப் பெயர் ஏற்பட்டுள்ளது. இதற்கு சதாம்குசைன் 30 வீட்டுத்திட்டம், நெட்பானா வீட்டுத் திட்டம், மையத்துப்பிட்டிக் கிராமம் எனப் பல பெயர்கள் உள்ளன.

**முதிரைக்காடு :-**

முதிரை மரங்கள் நிறைந்து நின்ற பிரதேசமாகையால் முதிரைக் காடு எனப் பெயர் பெற்றது.

**மஸ்தான்சேனை - றகுமத் நகர் :-**

மஸ்தான் என்பவர் சேனை வெட்டியிருந்த பிரதேசமாகையால் இப் பெயர் பெற்றது. றகுமத் நகர் காளவாய்சேனை என்ற பெயர்களும் இங்கு உள்ளன.

**றியாப் பள்ளி வெட்டை :-**

றியாப் என்பவரால் இங்கு ஒரு பள்ளி ஆரம்பிக்கப்பட்டதனால் இப் பெயர் ஏற்பட்டது. மக்காமடி வெட்டை என்றொரு பெயரும் உள்ளது.

**ஆத்தங்கரை வெட்டை :-** ஆற்றின் கரையினை அண்டியிருந்த பகுதியாகையால் இப் பெயர் ஏற்பட்டது.

**பொண்டுகள் சந்தை :-**

பெண்கள் எல்லோரும் கூடி இவ்விடத்தில் சந்தை நடத்தியதால் பொண்டுகள் சந்தை எனப் பெயர் ஏற்பட்டது.

**சதாம் ஹூசைன் கிராமம் :-** ஈராக் ஆட்சியாளர் சதாம் நிதி வழங்கியமை ஊடாக ஏற்பட்ட கிராமம்.

**ரஹ்மத் நகர் :-** இறை அருள் பெற்ற கிராமம் என பொருள்படும்

**முஹாஜிரீன் கிராமம் :-**

மக்காவில் இருந்து மதீனாவிற்கு இடம் பெயர்த்தவர்களை குறிப்பது முஹாஜிரீன்கள் என்பவர்கள் ஆவர் அதேபோன்று வன் செயல்கள் மூலம் குடி பெயர்ந்தவர்கள் ஏற்படுத்திய குடியிருப்பு ஆகும்.

**சிரட்டையன்குடா [ ஓட்டுப் பள்ளி ] :-**

இங்குள்ள பள்ளி ஓடுகளினால் வேயப்பட்டிருந்தமையால் ஓட்டுப் பள்ளி எனப் பெயர் பெற்றது.

**மாவடி வெட்டை :-** மாமரம் நின்ற வெட்டையாதலினால் இப் பெயர் ஏற்பட்டது.

**முனையா வெட்டை :-**

ஒரு கூரிய முனை போன்று அமைந்திருந்த பிரதேசம் முனையா வெட்டை எனப்பட்டது. பெரியதொரு பாலம் அமைந்திருந்தமையால் பெரியபாலத்தடி வெட்டை எனப்பட்டது.

## மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவின் ஊரும் பெயரும்

இலங்கையின் வனப்பை கேள்வியுற்று வட இந்தியாவிலேயுள்ள அயோத்தியிலிருந்து முற்குகர் இலங்கையின் கிழ்பாகம் வந்த போது ஒரு சதுப்பேரி காணப்பட்டது. அச் சதுப்பேரியினூடாக ஓடத்தினைச் செலுத்தினர். அப்போது வழியில் மண் செறிந்த ஓர் முனை குறுக்காகவிருந்தது அதனால் அவ்விடம் மண்முனை என அழைக்கப்பட்டது

தற்போது நிருவாக இலகு கருதி மண்முனை வடக்கு மட்டக்களப்பு நகரத்தினையும் மண்முனைப்பற்று ஆரையம்பதி பிரதேசத்தையும் மண்முனை தெற்கு களுவாஞ்சிகுடியையும் மண்முனை மேற்கு வவுணதீவுப் பிரதேசத்தையும் மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேசத்தினையும் குறிப்பனவாயுள்ளன.

**சத்துருக் கொண்டான் :-**

மட்டக்களப்பு பல பகுதிகளில் திமிலரும் மணற்காட்டு வேடுவரும் குடியிருந்தார்கள். முக்குகர் தமது ஆட்சியை இங்கு நிறுவியபோது இங்கு வாழ்ந்த திமிலர்களால் அவர்களுக்குப் பலதொந்தரவு ஏற்பட்டது. இதனால் திமிலர்களைத் துரத்திவிட எண்ணினர். திமிலர்களோடு சண்டை செய்து அவர்களில் பலரை வெட்டிக்கொன்று இங்கிருந்து துரத்தினர். இப்படி அவர்கள் கொல்லப்பட்ட இடமே சத்துரு கொண்டான் என அழைக்கப்பட்டது. கிழக்குப் பிரதேசத்தில் மட்டக்களப்பு மண்முனையில் உன்னரசுகிரி என்னும் மன்னன் ஆண்டு வந்தான் இவன் ஏழுபேரை சிற்றரசு மந்திரியாக நியமித்திருந்தான் இவர்களது பெயர்கள் **வவுணசிங்கம், புலியமாறன், சத்துருவண்டன், கொட்டகச்சன், நீலவண்ணசேனன், அகுராகுகட்டகமன்** என்பனவாகும். இவர்களில் கொட்டகச்சன், அகுராகு ஆகிய இருவர் தவிர ஏனையவர்களின் பெயர்களால் அவ்வூர் பெயர்கள் அமைந்துள்ளன. வவுணசிங்கம் - வவுணதீவு, புலியமாறன் - புளியந்தீவு, சத்துருவண்டன் - சத்துருகொண்டான், நீலவண்ணன் - நீலாவணை, கட்டகமன் - கட்டகாமம்.

**ஜெயந்திபுரம் :-**

வெற்றியினைத் தரும் ஊராகவும் விஷ்ணு வழிபாட்டினையுடையவர்கள் அதிகம் காணப்படும் இடமாகவும் காணப்படுகின்றது.

**ஊறணி :-**

ஊறல் + நீர் = ஊறணி ஆயிற்று என்பர் இதன்படி ஊற்று நீர் கிடைக்கும் இடம் என்பதனைக் கருத்தில் கொண்டு விரிவாக நோக்கும் இடத்து ஊரார் உண்ணும் நீரை உடையதால் ஊருணி எனும் பெயர் பெற்று பின்பு ஊறணி என மருவியதெனவும் கூறுவர். பிறிது ஓர் சாரார் ஊர் + உண்ணும் + நீர் எனும் சொற்கூட்டமே ஊறணியாய் மாறியிருக்க வேண்டும் எனக் கருத இடம் உண்டு.

**கொக்குவில் :-**

கொக்குகள் நிறைந்த குளம் கொக்குவில் எனப்பட்டது. குளத்திற்கு வில்லு என்றொரு பெயரும் இப்பகுதி மக்களால் கூறப்படுகின்றது.

**பிள்ளையாரடி :-**

பிள்ளையார் கோவில் இருக்கும் காரணத்தினால் இவ்விடம் பிள்ளையாரடி எனப் பெயர் பெற்றது.

**கொத்துக்குளம் :-**

முன்பு கதலிவனம் எனப்பட்டது. கதலிவாழை மரங்கள் நிறைந்திருந்தமையால் இப் பெயர் ஏற்பட்டது. குளத்தில் கொத்துக்களைக் குத்தி அதனுள் மீன்கள் மறைந்திருந்த போது மீன்பிடிக்கும் இடமாகையால் இப் பெயர் ஏற்பட்டது. கொத்துக்குளத்தினையடுத்து பெரியதுறை வேப்படித்துறை விண்ணாங்குக்காடு என்ற ஊர்களும் காணப்பட்டன.

**தாண்டவன்வெளி :-**

கலிங்க நாட்டிலிருந்து மட்டக்களப்பிற்கு வந்து சக்தி வழிபாட்டுக் காரணமாக மூன்று சகோதரிமார் மாமாங்க நதியில் நீராடி வழிபட்ட பின் புளியந்தீவின் வடமேல் புறவாவி எல்லையை வந்தடைந்தனர் என்றும் அவர்கள் அக்கால மக்கள் குடியேறியிருந்த கொத்துக்குளத்தில் ஒருவரும், தாண்டவன் என அழைக்கப்படும் இவ்விடத்தில் இருவரும் தாம் கனவில் பெற்ற திருவாணைப்படி தங்கிவிட்டனர் என்றும் முன்னவர் கொத்துக்குளத்தில் நிறுவிய சக்தி வழிபாட்டு நிலையம் முத்துமாரியம்மன் கோயிலாகவும், தாண்டவன்வெளியில் இரண்டாமவர் நிறுவிய பராசக்தி கண்ணகை அம்மன் என்றும் மற்றையவர் அதே சூழலில் நிறுவிய அன்னை வழிபாட்டு நிலையமே பின்னர் மாதா கோவிலாயிற்று என்றும் ஐதிக வரலாற்றுப்படி ஆண்டவன் அருள் பெற்ற வெளி ஆண்டவன்வெளி எனவும் பின்னர் மருவி தாண்டவன் வெளியாயிற்று எனவும் கூறப்படுகிறது.

**திருப்பெருந்துறை :-**

பண்டைய காலத்தில் இவ் நிலப்பரப்பு வாவியினால் சூழப்பட்டு கடல் வணிகம் செய்வோர் மட்டுநகர் முகத்துவரத்தின் வழியேதாம் கொண்டு வந்த பண்டங்களை பெரிய உருக்களின் மூலம் வாவியால் கொண்டு வந்து பெருந்துறையில் பெரிய உருக்கள் அங்கே தரிந்து நின்றமையாலும் இவ்விடம் பெருந்துறை எனவும் செவ்வம்மிகுதியாக காணப்பட்டமையினால் திருப்பெருந்துறை என சிறப்பிக்கப்பட்டது.

**பாரதிபுரம் :-**

முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அவர்களால் முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் கௌரவ திரு. செ. இராசதுரை அவர்களின் வேண்டுகோளின்படி ஏற்படுத்தப்பட்ட மாதிரி கிராமத்தின் பெயர் ஆகும்.

**பனிச்சையடி :-**

பனிச்சை மரங்கள் அதிகமாக காணப்பட்ட இடம் தற்போது சுனாமி மீள்குடியேற்றத் திட்டத்தின் கீழ் வீடுகள் அமைக்கப்பட்ட இடமாகும்.

**மாந்தீவு :-**

மா + அம் + தீவு என்பதன் அடிப்படையில் பெரிய அழகிய தீவு எனப் பொருள்படும் மேலும் இங்கு மான்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்த காடு அடர்ந்த பிரதேசமாக இருந்ததால் இப் பெயர் ஏற்பட்டது என்பர். இங்கு ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்ட தொழுநோய் வைத்திய சாலை உள்ளது.

**சேத்துக்குடா :-**

நீரோட்டம் காரணமாக அருகிலிருந்த வண்டல் மண்களால் இக்குடா நிரப்பப்பட்டு சேறுகள் உருவானதால் இப் பெயர் ஏற்பட்டது.

**கல்லடித் தெரு :-**

கல் + அடி + தெரு கல்லடித்தெரு ஆயிற்று இதன் படி கற்பாறைகளை அடியில் கொண்ட பகுதி இதுவாகும்.

**ஆயித்தியன் காடு :-**

ஆயித்தியன் என்பது ஒரு வகை காட்டு மரங்கள் ஆகும். இக் காட்டு மரங்கள் அடர்த்தியான காடாக காணப்பட்ட பிரதேசம்

**காக்கைத் தீவு :-**

ஆங்கிலேயர் இங்கு நிழல் வாகை மரங்களை அதிகம் நடுகை செய்து வளர்க்க அங்கு காகங்கள் கூட்டம் கூட்டமாக வாழும் சூழ்நிலையால் ஏற்பட்ட பெயர்.

**சல்லிப்பிட்டி :-**

சல்லிக்கற்களும் மட்டி இனங்களும் இங்கு அதிகம் அகழ்ந்து எடுக்கப்பட்டமையினால் இது ஒரு மேட்டு நில ஆகையினால் இப் பெயர் பெற்றது.

**திஸ வீரசிங்கம் சதுக்கம் :-**

மட்டக்களப்பின் நகர சபையின் தலைவராக இருந்த திஸ வீரசிங்கம் அவர்களால் நகர குடியிருப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்ட போது அவர் பெயரால் இவ்விடம் அழைக்கப்பட்டது.

**வெட்டுக்காடு :-**

புதிதாக காடுவெட்டி ஏற்படுத்தப்பட்ட குடியேற்றக் கிராமம் வெட்டுக்காடு என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மாட்டு வண்டிகளை ஒன்றித்து போடுவதற்கு காடுகளை வெட்டித் துப்பரவு செய்த இடமும் வெட்டுக்காடு எனப்பட்டது.

**தாமரைக்கேணி :-** தாமரைகள் நிறைந்த குளத்தின் காரணமாக இப் பெயர் ஏற்பட்டது.

**அரசடி :-** அரச மரம் நின்றி சந்தி அரசடிச் சந்தியென்றும் அரசடி என்றும் அழைக்கப்படுகின்றது.

**கூளாவடி :-** கூளாமரங்கள் நின்ற இடம் கூளாவடி என அழைக்கப்படுகிறது.

**டச்பார் :-**

டச்சுக்காரர்கள் (ஒல்லாந்தர்) கடல் வழியாக வந்து பின்வாவியூடாக நகருக்கு செல்லும் போது அவர்கள் ஓய்வு பெற்ற இடமாகவும் பொழுது போக்கு மது பானவகைகளைப் பரிமாறிய இடமாகவிருந்தமையினால் டச்பார் என அழைக்கப்பட்டது.

**புளியந்தீவு :-**

சோழர் ஆட்சிக்காலத்தில் அல்லது கதிர்சுதன் ஆட்சியில் நியமிக்கப்பட்ட அரசதிகாரிகளில் புலியமாறன் (சிற்றரசன்) வரிசேகரிப்பு இடமே புலியன் தீவு பின்பு புளியந்தீவு ஆயிற்று என்பர். மேலும் புளியமரங்கள் அதிகமாகக் காணப்பட்ட தீவு எனவும் பொருள் கொள்ள முடியும். மேலும் இலங்கையில் புளிந்தர் எனும் சமூக வாழ்ந்ததாக மகாவம்சம் கூறுகின்றன அச் சமுகம் இப்பிரதேசத்தில் வாழ்ந்தமையினால் ஏற்பட்ட பெயராகவும் இருக்க வாய்ப்பு உள்ளது என்பர்.

**கோரியடி :-**

கோரி + அடி கோரியடி என்றாயிற்று என்பர் கோரி என்பதற்கு சவக்காலை நினைவுச் சின்னம் எனப்பொருள்படும் இதன் படி இங்கு சவக்காலை இருந்ததா என்பதனை அறிய முடியாத நிலை இருப்பினும் தற்போது கோரியடி என்பது வெளிச்ச வீட்டின் சுற்றாடலையே இது குறிக்கின்றது.

**சிரட்டையன் குடா :-**

சிரட்டையன் என்பவன் வாழ்ந்த குடா பிரதேசம் எனப் பொருள்படும்.

**கள்ளியங்காடு :-**

கள்ளிச் செடிகள் நிறைந்த காடு எனப்பொருள் கொண்டு அழைக்கப்படுவதுடன் ஸ்ரீ நரசிங்க வைரவர் ஆலயம் காணப்படுகின்றமையினால் வைரவன் காடு எனவும் அழைக்கப்பட்டது.

**வேப்படித்துறை :-**

திருப்பெருந்துறையில் காணப்படும் பிரதேசம் வேப்பை மரங்கள் சூழப்பட்ட துறை எனப் பொருள்படும்.

**விண்ணாங்காடு :-**

விண்ணங்காடு என்பது ஒருவகை மரம் அம்மரங்கள் அதிகமாக காணப்பட்ட பிரதேசம் ஆகையினால் இப்பெயர் பெற்றது.

**புளியடிமுனை :-**

மட்டக்களப்பு வாவியின் வடமுனையில் புளிய மரங்கள் செறிவாக காணப்பட்ட பிரதேசம் இப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டது.

**கருவேப்பங்கேணி :-**

கருமையான வேம்பு மரங்களும் அருகே கேணி போன்ற பிரதேசம் காணப்பட்டமையினால் ஏற்பட்ட பெயர்.

**செழியன் சதுக்கம் :-**

மட்டக்களப்பு மாநகர சபை முதல்வராக காணப்பட்ட செழியன் J. பேரின்பநாயம் அவர்கள் நினைவாக ஏற்படுத்தப்பட்டது.

**காந்திகிராமம் :-**

புதிய குடியேற்றம் இந்தியாவின் மிதவாத தலைவரான மகாத்மா காந்தி நினைவாக ஏற்படுத்தப்பட்ட கிராமம்.

**நாவற்குடா :-**

நாவல் மரங்கள் அடர்ந்தும் படர்ந்தும் காடாக இருந்த ஓர்குடாப் பிரதேசம் நாவற்குடா ஆயிற்று என்பர். மேலும் ஆங்கிலேயர் காலத்தில் இது வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்ட வர்த்தகப் பிரமுகர்களைக் கொண்ட பிரதேசமாக இருந்துள்ளமைக்கு சான்றாக பழங்கால கட்டங்களின் எச்சங்கள் உள்ளன. இதனால் செல்வச் செழிப்புள்ள பிரதேசமாக கருதப்படுகின்றது.

**இருதயபுரம் :-**

திரு இருதயநாதர் ஆலயம் ஒன்று அமைந்துள்ளமை காரணமாக இயேசு பிரானாகிய திரு இருதயம் நிறைந்த திருப்பூமியாக இது பெயரிடப்பட்டிருக்கலாம் என்பர். ட

**மூர்ஷப்பிட்டி - மோரிசாப்பிட்டி :-**

1627ம் ஆண்டிற்கு முன்னர் பேரத்தக்கீசர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த வேருவல அளுத்கமம் களுத்துறை ஆகிய இடங்களிலிருந்தவர்களை நாடுகடத்திய போது அவர்களுள் 4000 பேரை கண்டி மன்னன் செனரத் மட்டக்களப்பில் குடியமர்த்தினான். அப்படி வந்தவர்களில் ஷா என்றும் பெயருடைய தலைவனைக் கொண்ட இணைத்தவர்கள் மட்டக்களப்பு வாவியிலுள்ள புளியங்குடா முனையில் தங்கியிருந்தனர். இவர்கள் தங்கியிருந்த இடமே மூர்ஷாப்பிட்டி எனப்பட்டது. Moor என்ற ஆங்கிலச் சொல் முஸ்லீம்களைக் குறிக்கும் (உ+ம்) மூர்பார்க்கட், மூர்ஸ்ரீற் (கொழும்பிலுள்ள தெருவும் சந்தையும்) தற்போது ஆட்சிப்பிரிவில் இப் பெயர்கள் நீக்கப்பட்டுவிட்டது.

**ஆனைப்பந்தி :-**

பொத்துவில் இறக்காமம் லகுகலை ஆகிய இடங்களில் பிடித்த யானைகளைக் கொண்டு வந்து கட்டி வைத்துப் பழக்கிய இடமே ஆனைப்பந்தியாகியது. மேலும் பெரு வெள்ளம் காரணமாக யானைகள் வந்து நின்ற மேட்டுநிலப்பகுதி இதுவே ஆகும்.

**சிங்களவாடி :-**

கி.பி. 1694 ல் ஒல்லாந்தரின் வியாபார நடவடிக்கையில் யானைத்தந்தம் முக்கியத்துவம் பெறும் நிலையில் யானைகளைப் பிடித்துப் பழக்கி மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் பொருட்டு, யானைகளைப் பிடிப்பதில் கைதேர்ந்த சிங்களவர்களை புளியந்தீவில் தற்காலிகமாக குடியமர்த்திய இடமே சிங்களவாடி எனப்பட்டது. இவர்கள் குடில்களை (வாடி) அமைத்து இந்த இடத்தில் வசித்து வந்தனர்.

**கோட்டைமுனை :-**

கோட்டைக்கு எதிர்புறமாக உள்ள முனையாக இருந்ததனால் கோட்டைமுனை எனப்பட்டது. (டச்சுக்கோட்டை)

**புன்னைச்சோலை :-**

புன்னைமரங்கள் நிறைந்த சோலையாகக் காணப்பட்டமையால் இப் பெயர் ஏற்பட்டது.

**மாமாங்கம் ( அமிர்தகழி ) :-**

இங்குள்ள குளம் முன்னாளில் மாமாங்கை நதி என வழங்கியது. இன்று இவ்விடத்தில் குளம் மாத்திரமே இருந்தாலும் வங்காளக்கடலில் குளக்கரையை அண்டி பாய்ந்து ஓடிய தடம் இன்னும் அழியவில்லை இன்றும் இந்தப்பள்ளத்தாக்கு மணலால் மூடப்பட்டிருந்ததாலும் மழைக்காலத்தில் பலமைல்கள் தூரம் தண்ணீர் தேங்கி நிற்பதை அவதானிக்கலாம் சிதைவுற்ற இந் நதியின் சான்றாக மாமாங்கக்குளம் இன்றும் நிலைத்துள்ளது.

இது அனுமார் தீர்த்தம், காக்கைத் தீர்த்தம், பழையாறு, நற்தண்ணீர்மடு, பாலமீன்மடு, மட்டிக்கழி ஓடை. கிண்ணையடித் தோனா ஒன்று ஏழு தீர்த்தங்களுடனும் தொடர்பாயிற்று இந்தக்குளத்தில் ஒரு வகை சேறு உள்ளது இது சந்தனச்சேறு எனப்படுகின்றது. இது அமிர்த சேறு எனப்படும். இதனால் சூழவுள்ள பிரதேசம் அமிர்தகழி என்பட்டது. இங்குள்ள மட்டி எனப்படும் ஒருவகை மீன் உணவு இப் பகுதியில் காணப்பட்டமையாலும் மட்டிக்கழி எனப்பட்டது. இங்குள்ள ஆலயம் மாமாங்கேஸ்வரர் ஆலயம் ஆகும். கருவறையில் சிவனைக்கொண்ட பிள்ளையார் ஆலயம் ஆகும்.

**வீச்சுக்கல்முனை :-**

தென்னிந்தியாவிலிருந்து ஈழம் வந்து மீன்பிடித் தொழில் மேற்கொண்ட திமிலர் குடியமர்ந்திருந்த இடமாக திமிலத்தீவும் அவர்களால் வலைகட்டி மீன் பிடித்த இடம் வீச்சுக்கல்முனை எனவும் அழைக்கப்பட்டது.

**கல்லடி :-**

கல் + அடி = கல்லடி என்பர் இதன் படி மட்டக்களப்பு வாவியில் படர்ந்து கிடக்கும் ஆனைக்கல்லும் நிலத்தின் கீழ் காணப்படும் கற்பாறைத் தொகுதியும் கல்லடி என பெயர் பெறக் காரணம் ஆயிற்று என்பர்.

**கல்லடி முகத்துவாரம் :-**

கல் + முகம் + துவாரம் கல்லடி முகத்துவாரம் என்றாயிற்று என்பர் வாவியின் நீர் கடலுடன் சேரும் இடமாக நீண்ட நெடும் காலமாகக் காணப்பட்டது.

**புது முகத்துவாரம் :-**

1957 டிசெம்பர் 24ல் மட்டக்களப்பில் பெய்த கடும் மழையினாலும் உன்னிச்சைக் குளம் உடைப் பெடுத்தாலும் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் மட்டக்களப்பு வாவியின் கரையோரங்கள் பெரிதும் பாதிக்கப்பட நீரை வேகமாக கடலுடன் பாய்ச்சுவதற்காக கடலையும் வாவியையும் இணைக்கும் குறு மணல் திட்டை அகற்றிய இடமாக புது முகத்துவாரம் உள்ளது.

**கல்லடி வேலூர் :-**

வேல் + ஊர் கல்லடி வேலாயுதர் சுவாமிகோயிலுக்கு முன்பாக அமைந்த இவ்வூர் முருகன் திருவருளை நினைந்து சூட்டப்பட்டது எனவும் மறுபக்கம் கல்லடியில் பிறந்த தமிழ் அறிஞர் வேலுப்பிள்ளை நினைவாக இவ்விடம் சிறப்பிக்கப்படுகின்றது.

**உப்போடை :-**

மட்டக்களப்பில் கடல் சார் தொழில்களால் உப்பு விளைவித்தலும் சொற்ப அளவில் காணப்பட்டது நீர் ஓடையில் உப்பு விளைவித்தமையால் உப்போடை எனப்பட்டது. சின்ன உப்போடை, பெரிய உப்போடை, கல்லடி உப்போடை, என மூன்று இடங்களும் காணப்படுகிறது.

**நாவலடி :-** நாவல்மரங்கள் நிறைந்து நின்ற இடம் நாவலடி எனப்பட்டது.

**திருச்செந்தூர் :-**

ஓங்காரானந்த சுவாமிகள் 1965ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மஹாசிவராத்திரி தினத்தன்று சிவானந்த ஆச்சிரமத்தில் படுத்திருந்த போது அவரது கனவில் தோன்றிய முருகன் திருச்செந்தூரிலிருந்து வரும் நான் கதிர்காமத்திற்கு இவ்வழியால் போவது வழக்கம். இவ்வேளையில் பனைமரத்தடியில் தங்கி ஓய்வு எடுப்பதால் இவ்விடத்தில் சிறிய கொட்டில் கட்டிவிடு இவ்விடத்தில் கொட்டில் கட்டப்பட்டு இன்று ஆலயமாகவுள்ளது. இதனால் ஈழத்துச்திருச்செந்தூர் என அழைக்கப்படுகிறது. பனைமரம் 1978 சுறாவளி 2004 சுனாமி ஆகிய அனர்த்தங்களின் போது அழிவடையாதுள்ளது குறிப்பிடத்தக்கது.

**சீலாமுனை :-** சிலாமீன்கள் பிடிபட்ட ஆற்றின் முனை சிலாமுனை எனப்பட்டது.

**சேத்துக்குடா :-**

சேறாகக் காணப்பட்ட பகுதியாகையால் சேத்துக்குடா எனப்பட்டது. திருப்பெருந்துறை என்பது வாவியினூடாக போக்குவரத்து நடந்த காரணத்தினால் இப் பெயர் ஏற்பட்டது.

**திராய்மடு :-**

திராய் எனப்படும் படர் செடி வகை மடுவில் காணப்பட்டதால் இதற்கு திராய்மடு எனப்பெயர் ஏற்பட்டது. திராய் மக்களின் சிறந்த இலைக்கறி உணவாகும்.

**மஞ்சந்தொடுவாய் :-**

மஞ்சன் +தொடுவாய் மஞ்சந்தொடுவாய் ஆயிற்று என்பர். மஞ்சன் என்பது இவ்வூர் குடித் தலைவரின் பெயரையும் தொடுவாய் என்பது இரண்டு நீர் நிலைகளை தொடுப்பது என்பதன் அடிப்படையில் ஸ்ரீ நரசிம்மர் ஆலயத்தினை அண்மித்தகுளம் மழைக்காலத்தில் நிரம்பும் போது கால்வாய் வெட்டி அதனை வெளியேற்றமையினை குறித்து நிற்கின்றது.

**பாலமீன்மடு :-**

மாமாங்கத் தீர்த்த்துடன் தொடர்புபட்ட ஏழுவகைத்தீர்த்தங்களில் ஒரு தீர்த்தகுளமாக ஆரம்பத்தில் காணப்பட்டது. அனுமார் தடம்பதித்த பள்ளமே பாலமீன்மடு ஆயிற்று என்பர். (விளக்கம் மாமாங்கம்) மீன்கள் நிறைந்த மடு தான் பாலமீன்மடு என்பது பொருத்தமாயுள்ளது.

**பூம்புகார் :-**

சிலப்பதிகாரத்துடன் தொடர்புபட்ட நகர் என்பதுடன் கண்ணகி ஆலயம் காணப்பட்ட இப்பகுதியாதலாலும் வெற்றுக் காணியில் மக்கள் குடியேறிய போதும் ஏற்பட்ட பெயர் முன்பு இப்பகுதி உப்புத் தன்மையுடைய நிலமாகக் காணப்பட்டது.

**புது நகர் :-**

ஆயத்தியன் காடு எனப்படும் தற்போதைய மட்டக்களப்பு போதனாவைத்தியசாலை அமைந்துள்ள பிரதேச மத்தியிலே புதூர் அமைந்துள்ளது.

**திமிலத்தீவு :-**

தென்னிந்தியாவிலிருந்து வந்து மீன்பிடிப்பதற்காக திமில் எனப்படும் பெரிய மரங்கலங்களையும் உடையவர்களை கொண்ட இடம் ஆரம்பத்தில் திமில் தீவு எனவும் பின்னர் திமிலர் தீவு எனவும் அழைக்கப்பட்டது.

**வலையிறவு :-**

திமிலர் குடியேறிய திமிலதீவில் அவர்கள் வலைகட்டிய ஆற்றின் ஒதுக்குப்புறம் வலையிறவு ஆகியது.

**நொச்சிமுனை :-**

கரையோரப்பகுதி முனைகளால் நொச்சி எனப்படும் ஒருவகைத் தாவரம் காணப்பட்டமையினால் நொச்சிமுனை எனப்பட்டது.

**ஞானசூரியம் சதுக்கம் :-**

ஞா.ஞானசூரியம் என்பவர் மூலம் ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டம் என்பதால் ஏற்பட்ட பெயர்.

இலங்கையின் வரலாற்றில் இரண்டாம் காலகட்டம் எனக்கருதப்படும் கி.பி 1505~ கி.பி 1948~02~04ம் திகதி வரையிலான காலகட்டங்களில் தலைநகரங்கள் ஓடத்துறைகளையும், துறைமுகங்களையும் அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றன. உதாரணமாக கல்குடா, முகத்துவாரம், புளியந்தீவு, திருப்பெருந்துறை என்பன முதன்மை பெறத் தொடங்கின. இதற்கான சான்றுகளாக இப்பகுதிகளில் வெளிச்ச வீடுகள் சுமைதாங்கிகள் இருபுறமும் நிழல்தரும் பாரிய மரங்கள் நடப்பட்டன.

இக்காலப்பகுதியில் ஊர்களுக்கு பெயர்களும் சூட்டப்பட்டது. உதாரணமாக ஓட்டமாவடி, பிறைந்துறைச்சேனை, காவத்தமுனை, ஓந்தாச்சி மடம் என்பன ஐரோப்பிய இனங்களால் சூட்டப்பட்ட பெயர்களாக உள்ளன.

## காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவு ஊரும் பெயரும்

**காத்தான்குடி :-**

காத்தான்குடி என்னும் ஊர்ப் பெயரோடு ஒரு பரம்பரைக் கதையும் கூறப்படுகின்றது. காத்தான் என்பவனை ஊரைக்காத்தவனாக்கி அக்கதை புனையப்பட்டுள்ளது.

**கதை - 1**

இதன் படி காத்தான் என்னும் வேடக்குடிமகன் அங்கே தற்போது சின்னப்பள்ளியடி எனக் கூறப்படும் ஐந்தாம் ஏழாம் வட்டாரத்திற்குச் சமமான இடத்தில் குடியேறி சேனைப் பயிர் செய்து வந்தான். எனவும் நாளடைவில் அவ்விடம் காத்தான்குடி என வழங்கலாயிற்று என்பர். கிழக்கிலங்கைப் பகுதியில் கண்டி அரசனால் முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டதும் அங்கு வாழ்ந்த தமிழ் குடிகள் புதுக்குடியிருப்பில் அல்லது ஆரையம்பதியில் இடம் பெயர முஸ்லீம்கள் வாழலாயினர் என்பர்.

**கதை - 2**

இவ்வூர் தொடக்கம் கொக்கட்டிச் சோலையை மையமாகக் கொண்டு விவசாயம் செய்து வந்த முக்குகர்களின் தலைவனான காத்தான் என்பவருக்கே சொந்தமாயிருந்தது காத்தான்குடி முதலாம் இரண்டாம் குறிச்சிப் பகுதியில் இவர் சேனை செய்த இடமே இன்றும் சேனைத்தெரு என அழைக்கப்படுகிறது. இவர் சேனையினைத் தன் ஊர் வீதியில் முதல் பள்ளி வாசலாயமைந்த சின்னப்பள்ளியடி என்ற இடத்தில் ஒரு குடிசைப்பரண் அமைத்து பாதுகாத்து வந்தான்.

இந்த நிலையில் முக்குகர்களுக்கும் திமிலர்களுக்கும் அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்த வேளையில் கிழக்கு கடல் வழியே திருகோணமலைத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த அரேபிய முஸ்லிம் வணிகர்களின் மரக்கலம் ஒன்று புயலால் அடிக்கப்பட்டு மட்டக்களப்பு வாவியின் ஊடே ஒன்று சின்னப்பள்ளியடி என்னும் இடத்தில் கரைதட்டியது. இங்கு இவர்களுக்கும் காத்தானுக்கும் ஏற்பட்ட நட்பின் காரணமாக பலம் பெற்ற முக்குகர்கள் திமிலரை வெற்றி கொண்ட பின்னர் முக்குகர்களால் பட்டாணியர் என அழைக்கப்பட்ட அரேபிய முஸ்லிம் வணிகர்களுக்கு தமது குடிகளில் உள்ள சிறந்த அழகிகளை மணம் செய்து வைத்து இந்நிலப்பரப்பையும் அன்பளிப்பாக கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

> கி.மு 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 1505 வரையிலான காலப்பகுதியில் மன்னர்களுடன் தொடர்புபட்ட கர்ணபரம்பரைக் கதைகளாக அவர்கள் மாவீரர்களாகவும் அரக்கர்களை அடக்கி அணைக்கட்டுகளைக் கட்டியவர்களாகவும் தெய்வ பக்தி உடையவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர்.
> உதாரணம்:- பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவில் சோதையன் கட்டு. மண்முனைப்பற்று, எருவில் பற்று (களுவாஞ்சிக்குடி), குருக்கள்மடம், செட்டிபாளையம், பாண்டிருப்பு என்பன குறிப்பிடத்தக்கன.

## மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச செயலாளர் பிரிவின் ஊரும் பெயரும்

**காங்கேயன் ஓடை :-**

மண்முனை மேற்குப் பிரதேசம் ஆரம்பத்தில் காத்தான் பாலன் காங்கேயன் ஆகிய வேடர் தலைவர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்து அவர்கள் பெயர் கொண்டே இப்பிரதேசங்கள் அழைக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது. காங்கேயன் ஆட்சி செய்த பகுதி காங்கேயன் ஓடை எனப்படும்.

சேனைப் பயிர் செய்கையில் ஈடுபட்ட காங்கேயன் பெரியகுளத்து ஓடை,பிரதான ஓடை ஆகிய ஓடைகளைப் பராமரித்து வடிகால் அமைப்பினை இக்கிராமத்தினூடாகச் செய்து விவசாயத்தையும் மீன் பிடியையும் ஊக்குவித்ததன் மூலம் இவனது காலத்தில் இக்கிராமம் செழிப்புற்றது. எனவும் மக்கள் மத்தியில் பிரபல்யமான காங்கேயனது பெயரைக்குறித்தே காங்கேயன் ஓடை உருவானது என்பர்.

**செல்வா நகர் :-** தந்தை செல்வநாயகத்தின் பெயர் செல்வாநகர் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

**வேடர்குடியிருப்பு :-**

உலகநாச்சி மண்முனையில் ஆட்சி செய்த காலப்பகுதியில் காங்கேயன் ஓடை பாலமுனை கிராமங்களில் வசித்தவர்கள் குடியேறிய இடமே வேடர் குடியிருப்பு என அழைக்கப்பட்டது.

**புதுக்குடியிருப்பு :-**

உலகனாச்சி மண்முனையை ஆண்ட காலப்பகுதியில் அப்பகுதியிலிருந்து ஒரு பகுதியினர் இன்னோர் பகுதியில் புதிதாகக் குடியேறினர். இவ்வாறு புதிதாகக் குடியேறிய இடமே புதுக்குடியிருப்பு ஆகும்.

**ஒல்லிக்குளம் :-**

கோயில் குளத்திற்கு அண்மையில் அமைந்துள்ள நீர் நிலைப் பிரதேசத்தில் ஒல்லி எனப்படும் நீர்த் தாவரம் நிறைந்திருப்பதனால் ஒல்லிக்குளம் என அழைக்கப்படுகிறது. ஒல்லிக்காயில் பெறப்படும் ஒல்லி அரிசி சிறந்த ஓர் அரிசிச் சோறாகும். இக்கிராமத்தினுள்ளே கீச்சான் எனப்படும் நீண்ட கால்களையுடைய ஒரு வகைப் பறவையினம் காணப்படுவதனால் கீச்சான் பள்ளம் என்னும் பெயரும் உள்ளது.

**கோயில் குளம் :-**

உலகநாச்சியால் அமைக்கப்பட்ட கோயிலும் குளமும் ஒருங்கே அமைந்துள்ளபடியால் கோயில் குளம் எனப்பட்டது. பெரியநாவலடி தேத்தாவடி சிகரம் சீவிரட்டி ஆகிய காரணப் பெயர்களும் இக் கிராமத்திற்கு உள்ளன.

**மண்முனை :-**

மண் மிகுந்த பிரதேசமாகவும் நீரால் சூழப்பட்ட முனையாகவும் காணப்பட்டமையினால் மண்முனை என அழைக்கப்படலாயிற்று. உலகநாச்சி இப்பிரதேசத்தை ஆண்ட காலத்தில் மண்முனையிலேயே தன் வசிப்பிடத்தை அமைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது. சேனைத் தெருவென்ற பெயரும் உள்ளது.

**தாழங்குடா :-**

வேடர் குடியிருப்புக்கு அருகே குடாப்பகுதியில் உள்ள இக் கிராமத்தில் தாழை மரங்கள் நிறைந்து காணப்பட்டதன் காரணமாக தாழங்குடா என அழைக்கப்பட்டது. இங்கு கல்வியியல் கல்லூரி ஆயுர் வேதவைத்திய நிலையம் ஆகியனவும் அமைந்துள்ளன.

**கிரான்குளம் :-**

மண்முனை பிரதேசத்தில் சிறிய குளங்கள் அதிகளவில் உள்ள பிரதேசம் கிரான்குளமாகும். இக் குளங்களில் மருத்துவக் குணம் நிறைந்த கிரான்புல்லு அதிகமாகக் காணப்பட்டதனால் கிரான்குளம் என அழைக்கப்பட்டது. தீவு தோனா, ஆகிய பெயர்களும் உள்ளன.

**பாலமுனை :-**

உலகநாச்சி மண்முனையை ஆண்ட காலப்பகுதியில் பாலன் என்னும் வேட இனத்தைச் சேர்ந்தவன் இக்கிராமத்தின் தலைவனாகவிருந்தான் இக்கிராமத்தால் மீன்பிடித் தொழில் பிரதானமாகவிருந்து அங்கு குடியேறியவர்கள் தலைவனாகவிருந்த இவனது பெயரைக் கொண்டே பாலமுனை எனப் பெயர் பெற்றது. நடுப்பாலை, கிரித்தோனா, புதியபாலமுனை ஆகிய பெயர்கள் உண்டு.

**மாவிலங்கைத்துறை :-**

இயற்கைத் துறைமுக வசதி கொண்ட இப்பகுதியில் கரையோரத்தில் மாவில மரங்கள் நிறைந்து காணப்பட்டதனால் இப்பகுதி மாவிலங்கைத்துறை என அழைக்கப்பட்டது. வம்மியடி ஆகிய பெயர்களும் உள்ளன.

**இராசதுரை கிராமம் :-**

பாராளுமன்ற உறுப்பினரும் இந்துகலாச்சார அமைச்சருமாகவிருந்த கௌரவ செல்லையா இராசதுரை அவர்களால் உருவாக்கப்பட்ட கிராமம் அவர் பெயராலேயே அழைக்கப்பட்டது. சீவரட்டி என்ற பெயரும் உள்ளன.

---

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி ஆகிய பிரதேசங்களில் ஓட்டமாவடி வரலாறு தவிர்த்த ஏனைய இரு பிரதேசங்களிலும் உள்ளவர்களின் வரலாறுகள் தமிழர்களுடன் தொடர்புபட்டு காணப்படுகின்றது. இதன்படி தமிழ்க் குடிகளில் உள்ள பெண்களை அரேபிய வணிக வழிவந்தவர்கள் திருமணம் செய்தமை ஊடாக முஸ்லிம் பாரம்பரியம் வளர்ச்சி பெற்றமை நிலைநிறுத்தப்படுகின்றது.

முஸ்லிம் பெண்கள் முக்காடு போடும் பழக்கம் தமிழ்ப் பெண்களிடம் இருந்தே உருவாகியுள்ளமைக்குச் சான்றாக அரச வழிவந்த பெண்கள் முக்காடு போடும் வழக்கம் உடையவர்கள் என்பது கண்கூடு. மேலும் இந்து ஆலயங்களில் தெய்வம் ஆடும் நிலையின் பெண்தெய்வங்களுக்கு ஆடுபவர்கள் முக்காடு அணியும் வழக்கத்தினையும் உடையமை குறிப்பிடத்தக்கது.

---



கோறளைப்பற்று 2010ம் ஆண்டுப் பிரதேச செயலக மட்டத்தில் கிராம சேவையாளர்களுக்கு இடையிலான போட்டியில் 1ம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 3ம் இடத்தினையும் பெற்றுக் கொண்ட **திரு. கா. சண்முகநாதனை** பாராட்டுகின்றோம்.

**– கலாசாரப்பேரவை –**

## மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவின் ஊரும் பெயரும்.

**பாவற்கொடிச் சேனை :-**

இங்கு சேனை செய்த மக்களால் அதிகமாகப் பயிரிடப்பட்டது பாகல்கொடி ஆகையினால் பாவற்கொடிச்சேனை ஆயிற்று.

**பன்சேனை :-**

பன் புற்கள் அதிகமாக வளர்ந்து சேனைபோல் காணப்படமையினால் ஏற்பட்ட பெயர் ஏதியன்குடா, நெடுஞ்சேனை, நல்லதண்ணிஓடை, கண்டிஆறு, அடைச்சகல், எனவும் பல பெயர்கள் உள்ளன.

**நரிப்புல் தோட்டம் :-**

நரிப்புல் என்பது வட்டவடிவமான சட்டிபோன்ற அடியினையுடைய ஈர்க்கில் போன்ற பருமனையுடைய ஒரு அடிஉயரம் வரை வளரக்கூயடி புல் இனமாகும். இது உவர் நிலத்தில் வளரக்கூடியது. தொட்டம் என்பது சிறுசிறு வெளியாகும். தொட்டம் தொட்டமாகக் காணப்பட்ட புல் பிரதேசம் நரிப்புல்தொட்டம் எனப்பட்டு மருவி நரிப்புல்தோட்டம் ஆகியது.

**ஆயித்தியமலை :-**

சூழவுள்ள இடங்கள் சோலைக்காடாக இருந்த காலத்தில் இந்த இடம் பரந்தர வெளியாகவும், வெயில் மிகுந்த இடமாகவும் சூரியன் அடிவானத்தில் உதிக்கும்போதே துல்லியமாகப் பார்க்கக் கூடியதாக இருந்தமையினால் சூரியனின் பெயர்களில் ஒன்றாகிய ஆதித்தன் என்னும் பெயரை அடிப்படையாகக் கொண்டு ஆதித்தன்மலை ஆயித்தியமலையாகியது. ஆயித்தியமலை வடக்குத் தெற்கு என இருபரிபாலனப் பகுதிகளை உடையது. மணிபுரம், தெள்ளூர், பள்ளச்சேனை, கற்பானை, ஆகிய பெயர்களும் இதற்கு உள்ளன.

**காந்தி நகர் :-**

1983ல் இனப்பிரச்சினை காரணமாக மலைநாட்டிலிருந்து வந்தவர்கள் குடியேறிய கிராமம் காந்திமகானின் பெயரால் காந்திநகரமாகியது.

**கொத்தியாபுலை :-**

இவ்விடத்திற்குத் தென்பக்கமாக ஒரு சவக்காலை காணப்பட்டது. இதன் முன் பகுதி புலைவாசல் எனப்பட்டது. இவ்விடத்தில் காணப்பட்ட நாவல் மரத்தில் துட்ட தெய்வம் காணப்பட்டதாகவும் கர்பிணித் தாய்மார்களின் சுகப்பிரசவத்திற்காக கொத்தியன் எனும் தெய்வத்திற்கு நேர்த்தி வைப்பதும் அக்கால மக்களின் வழக்கமாய் இருந்தது. புலைவாசல் நாவலடியில் கொத்தியாம் நிற்பார் என்னும் காரணத்தினால் அவ்விடத்திற்கு சிறுவர்கள் போவதில்லை. எனவும் கூறப்பட்டது. எனவே இவ்விடம் நாளடைவில் கொத்தியாபுலை எனத்திரிந்து நிலைபெற்றது. கலிங்கர் காலத்தில் கொத்தனார்துறை எனவும் அழைக்கப்பட்டது.

**நெடிய மடு :-**

நீளமான (நெடிய) பள்ளங்கள் (மடு) காணப்படுவதனால் நெடியமடு எனப் பெயர்பெற்றது. மடு என்பது மரபுவழிச் சொல்லாகும். இது குளிபோன்ற பள்ளங்களைக் கொண்டிருக்கும். குரக்கன்சேனை, படுகாடு, கொளியனாறு எனவும் பல பெயர்கள் உள்ளன.

**விளாவட்டவான் :-**

சிறு தாழ்ந்த நிலப்பரப்பில் வயலுக்கு அருகில் நீரைத் தேக்கிவைத்து வயலுக்கு (வட்டை) தேவைக்கேற்ப நீரைச் செலுத்துவதும் வயலில் நீர் கூடினால் அகற்றுவதற்கும் உள்ள இடத்தினை முன்னோர்கள் வான் என்று அழைத்தனர். வட்டையும், வானும் சேர்ந்த இடத்தில் விளாமரங்கள் ஏராளம் நின்றதினால் விளாவட்டவான் எனப் பெயர் பெற்றது.

**மகிழவட்டவான் :-**

விளாவட்டவான் போன்று மகிழமரங்கள் நின்ற இடம் மகிழவட்டவான் எனப்பட்டது. மகிழ மரங்கள் செறிந்து காணப்பட்ட இடம் இப் பெயர் பெற்றது. கற்குடா, சின்னத்தோட்டம், தைலாந்தோட்டம், என வேறு பெயர்களும் உள்ளன.

**கரவெட்டி :-**

இவ்வூரில் வசித்து வந்த ஒரு குடும்பஸ்தர் தனது மனைவிக்குப் பட்டுச்சேலை வாங்கிக் கொடுத்தார். அதை அணிந்து கொண்டு தண்ணீர் எடுக்கச் சென்ற அவள் தண்ணீர் எடுத்துக்கொண்டு வரும்போது தனது சேலையின் கரைபார்த்து இரசித்துக்கொண்டு வருகையில் வழியில் காணப்பட்ட கல்லில் இடறிக் கீழே விழுந்து விட்டாள். என்பதால் கோபங்கொண்டு அச்சேலையின் கரையை வெட்டி விட்டார். சேலைக் கரையை வெட்டியதால் கரைவெட்டி ஆகிற்று.

இன்னும் ஒரு கருத்து உள்ளது. இப்பகுதியில் விளையும் தானியங்களை வாவியின் அப்பால் எழுவான் கரைக்குக் கொண்டு செல்வதற்கு மண்முனை ஆறு உதவியாய் இருந்தது. அதே போன்று ஏனைய வியாபாரப் போக்கு வரத்துகளுக்கும் நடைபெற்றன. இங்குள்ள வள்ளங்களை ஊரின் உட்பகுதியால் கொண்டு வந்து கட்டி வைப்பதற்காக சிறுசிறு கரைகள் வெட்டப்பட்டன. அதனாலும் கரைவெட்டி கரவெட்டியாகியது.

**மண்டபத்தடி :-**

தற்காலிகமாக ஒரு விழாச் செய்வதற்காக சேலைகள், குருத்தோலைகள் கட்டி அங்கு மண்டபம் ஒன்றை அமைத்து வதனமார் சடங்கு நடத்துவதற்கு வெள்ளைகட்டி காவல் செய்த இடமாகவும் இது காணப்பட்டதால் மண்டபத்தடி எனப் பெயர் பெறக் காரணமாயிற்று. இங்குள்ள வைத்தியசாலை அமைக்க இடமில்லாது இருந்தபோது வேற இடத்தில் வேறு இடத்தில் வைத்தியசாலை கட்டியதால் இவ்விடம் புது மண்டபத்தடி எனப்பட்டது.

**பருத்திச்சேனை :-**

இக்கிராமத்தில் 1931ம் ஆண்டளவில் பல பருத்தி மரங்கள் நிறைந்து காணப்பட்டன. இங்கு சேனை செய்பவர்கள் இம்மரங்களை வெட்டியழித்துச் சேனை செய்தனர். இதன் பின்னர் இக்கிராமத்தில் பருத்திச்சேனை எனப்பட்டது. வெள்ளாமைச்சேனை, பிள்ளையாரடி, எனவும் பல பெயர்கள் உள்ளன.

**ஈச்சன்தீவு :-**

இக்கிராமத்தில் ஈச்சைமரங்கள் அதிகமாக காணப்படதால் இவ்வூரின் கிழக்குப்பக்கம் 100ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் வேளாண்மை செய்ததாகவும் இந்நிலப்பரப்பு தீவாகக் காணப்பட்டதாலும் ஈச்சன்தீவு எனவும் எனப் பெயர்பெற்றது.

**வவுணதீவு :-**

இராஜராசன் காலத்தில் வவுணசிங்கன் என்பவன் இவ்விடத்தில் நியமிக்கப்பட்டு பரிபாலிக்கப்படதனால் அவன் பெயரால் தீவாகிய இப்பிரதேசம் வவுணதீவு ஆயிற்று சாலம்பைக்கேணி, கரடிப்பூவல், பாரதிநகர் எனவும் பல பெயர்கள் உள்ளன.

**நாவற்காடு :-**

ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்தே அவ்விடத்தில் நாவல்மரங்கள் நிறைந்திருந்தன. இதனால் நாவற்காடு எனப் பெயர்ஏற்பட்டது. இறக்கத்துமுனை, பாட்டாளிபுரம், மாவடித்தீவு, எனவும் பல பெயர்கள் உள்ளன.

**மங்கிக் கட்டு :-**

இக்கிராமத்தை அண்டிய தென்பகுதியில் ஒரு கட்டுக் காணப்படுகின்றது. நீரைத்தேக்கி வைக்கும் அணைக்கட்டு இக்கட்டடினை மங்கை எனும் பெயருடை பெண் கட்டியதால் மங்கைக் கட்டு என்னும் பெயர் மருவி மங்கிக் கட்டு ஆகியது.

**கன்னன்குடா :-**

குடியிருப்புக்குப் பக்கத்தில் கனம் குடா இருப்பதனால் கன்னன்குடா ஆகியது எனவும் இக்கிராமத்தின் வடக்கே திமிலதீவிலிருந்து கண்ணபிரான் பக்தர் ஒருவர் இங்கு குடியேறி விவசாயம் செய்து பணம்படைத்தவராகி குட்டிக்கர்ணன் போல் காணப்பட்டார் எனவும் கூறப்படுகின்றது. குடா போன்ற பகுதியாகவும் உள்ளது.

**கரையாக்கன் தீவு :-**

இங்கு வேடனொருவன் கரையாக்கன் என்னும் தெய்வத்திற்கு பூசை செய்து வந்ததனால் கரையாக்கன் தீவு ஆகியது. நீல நிற கரையாக்கன் பூக்கள் பூக்கும் பற்றைகள் நிறைந்த இடமாகவிருந்தமையாவும் இப்பெயர் பெற்றிருக்கலாம்.

**குறிஞ்சாமுனை :-**

குறிஞ்சாச் செடிகள் நிறைந்து காணப்பட்டதினால் குறிஞ்சாமுனை எனப்பட்டது. குறிஞ்சன் என்னும் வேடன் சேனை வெட்டி குடியிருந்ததால் இப் பெயர் பெற்றது எனவும் கூறப்படுகின்றது.

**காஞ்சிரங்குடா :-**

காஞ்சிரங் கொடிகள் குடாபோன்று காணப்பட்டதால் இப் பெயர் பெற்றது. இது முட்கள் நிறைந் செடி.

**உன்னிச்சை :-**

இங்கு காணப்படும் குளத்தின் பழைபெயர் வன்னிச்சை குளம் என Mnogroph of Batticaloa என்னும் நூலில் கூறப்பட்டடுள்ளது. இது மருவி உன்னிச்சை ஆனது எனப்படுகின்றது. அரசர்கள் கூடும் பிரதான இடங்களில் மாட்புட்டி, மணற்புட்டி, நாற்புட்டி, மகலவத்தை, உன்னாஞ்சை, தம்புட்டி, பங்கிடான்வெளி, அம்பிளாந்துறை, கொக்குகாசி, அப்பன்புட்டி, அறுகமனப்பூமசை என்பன காணப்பட்டதாக கல்வெட்டுச் செய்திகளில் உள்ளன. இதில் வரும் உன்னாஞ்சை மருவி உன்னிச்சையாகவிருக்கலாம் எனவும் கூறப்படுகின்றது.

**அட்டைப்படத்தின் விளக்கம் :**

இலங்கை மன்னராட்சிக்கு உட்பட்ட தன்மையினையும், அன்னியராட்சிக்கு உட்பட்ட தன்மையினையும் சுதந்திரத்தின் பின்னரான வளர்ச்சிகளையும் புலப்படுத்துகிறது.

அட்டையின் முன்புறம் புலியமாறன் மாதிரி வரைபடமும், டச்சுக் கோட்டை, பாசிக்குடா, வெளிச்சவீடு, கொக்கட்டிச்சோலை ஆலயம், அந்நியர் ஆட்சியின் போது முகத்துவார வீதி, என்பனவும்

பின்பக்க அட்டையில் பிரித்தானியர் படை திருகோணமலையினை கைப்பற்றிய நிலையில் உள்ள படமும், பிரித்தானியர் கால மட்டக்களப்பு துறைமுகமும் தற்போது வாசிகசாலை *(Batticalo Gate)* உள்ள இடமும் ஆகும்.

## மண்முனை தெற்கு எருவில் பற்றுப் பிரதேச செயலக பிரிவின் (களுவாஞ்சிக்குடி) ஊரும் பெயரும்

**குருக்கள் மடம் :-**

கி.பி. 1766ல் ஒல்லாந்தர் அருமைக்குட்டியை மட்டக்களப்பிற்கு வடபகுதி போடியாக நியமித்தபோது அம்பிளாந்துறையில் ஒரு கல்விக்கூடம் அமைக்கப்பட்டது எனவும் அங்கு செம்பன் முதலிய ஆசிரியர்களுடன் சம்புநாதன் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர்கள் திருச்சிராப் பள்ளியில் இருந்து வரவழைக்கப்பட்டவர்கள் எனவும் இவர்கள் இருந்த இடமே (குரு) குருக்கள்மடம் ஆகும்.

இங்கு தற்போது கிடைக்கப்பட்ட தொல்பொருட்களில் பழைய ஒரு மடத்துக்குரிய கற்தூண்கள் படிக்கற்கள் சிவன் சிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வேதப்பிட்டி எனவும் அழைக்கின்றனர். மாகோன் ஆட்சிக்காலத்தில் வீரசைவ குருக்கள், தேசத்துக்குருக்கள் என இரு பிரிவினைக் கொண்டு காணப்பட்டது. தேசத்துக் குருமார் கொக்கட்டிச்சோலை போரதீவு திருக்கோயில் முதலிய தேசத்துக் கோயில்களில் பூசைசெய்தனர். இவ்விரு குருமார்களும் இம்மாநிலத்தில் தலைமை தாங்கினர். உலக குரு அல்லது குருநாதர். இவர் இம் மாநிலத்தில் அமைந்திரந்த வீர சைவமடத்தின் மடாதிபதியாவார். இம்மடமே குருக்கள் மடமாக அமைந்திருந்தது. ஓர் காலத்திலேயே அம்பிளாந்துறையினூடாக படுவாங்கரையில் வீரசைவப் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

**செட்டிபாளையம் :-**

எதிர்மன்ன சிங்கன் ஆட்சிக்காலத்தில் வளம் மிக்க மட்டக்களப்பு பிரதேசத்திற்கு இந்தியாவிலிருந்து அண்ணாமலைச் செட்டிகன் அல்லது நாட்டுக்கோட்டை செட்டிமார் என்பவர்களும் வடநாட்டிலிருந்து துலுக்கிய வியாபாரிகளும் வந்து நாப்புட்டி முனைக்கு மேற்கில் கிட்டங்கி வீடுகளை அண்டி அங்கிருந்து வர்த்தகம் செய்தனர். அதுவே செட்டிபாளையம் ஆயிற்று. இந்தியத் தொடர்புடையது சேனை எனப் பொருள்படும் என திரு.க.கணபதிப்பிள்ளை அவர்களின் கருத்து. இலங்கையில் தென்னிந்தியச் செட்டிகளின் வணிக நடவடிக்கை மிகத் தொன்மையானது. மட்டக்களப்பினூடாக நடைபெற்ற நடவடிக்கைகளில் முக்குகர், பட்டாணியர், திமிலர் ஆகியோருக்கெல்லாம் முன்பிருந்தே செட்டிகள் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு அவர்கள் தங்கியிருந்த தற்காலிக இடங்களே செட்டிபாளையம் எனப்பட்டது.

மேலும் பாளையம் என்பது கூடாரம், படை என்றெல்லாம் பொருள் தருவதாய் உள்ளது. வணிகத்தில் ஈடுபட்ட செட்டிகள் எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. திரு.கந்தசாமி அவர்கள் இந்தியத் தொடர்புடைய சேனையே செட்டிபாளையம் என்பது குறிப்பிடத்தக்கது எனக் கூறுகின்றார். மட்டக்களப்பில் செல்வாக்குப் பெற்றிருந்த செட்டிபாளைய உட்பிரிவுகளுள் நாட்டுச் செட்டி, வாணிபச் செட்டி, பட்சணைச்செட்டி, கவறைச்செட்டி, வேளாளச்செட்டி, இலைவாணிபச் செட்டி, பூனூல்செட்டி, எண்ணெய் வாணிபச் செட்டி, வியாபாரிச்செட்டி எனப்பல செட்டிகள் காணப்பட்டதை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயக் குடுக்கைக் கல்வெட்டில் கூறப்படுகின்றது.

**தேத்தாத்தீவு :-**

தேத்தா மரங்கள் காணப்பட்டமையினால் நீர்ச் சூழலினை அடிப்படையாகக் கொண்ட தீவு தேற்றாத்தீவு தேத்தாத்தீவு ஆகியது.

**மாங்காடு :-**

காட்டு மரங்கள் நிறைந்து நின்ற இடமாதலினால் மாங்காடு எனப் பெயர் பெற்றது.

**சந்திபுரம் :-**

கொம்புச் சந்தி என்று அழைக்கப்பட்ட இடம் சந்திபுரமாக மாறியது. இங்குள்ள பறைய இனைத்தைச் சேர்ந்த சிலர் களுவாஞ்சிகுடியில் வசித்தனர். கி.பி 644ல் மட்டக்களப்பின் மன்னாகிய பாலுவின் மகனாகிய அமரசேனன் ஆட்சிக்காலத்தில் இராமர் நாட்டு மறவர்குலத்து இராசகுலத்தைச் சேர்ந்த ஏழு பெண்கள் தங்கள் தங்கள் மணமகனுடனும் சிறைத் தளங்களுடனும் வவனிய குலத்து குருக்கள் குடும்பம் ஐந்தும் சேர்ந்து மட்டக்களப்பின் பரிசுத்தங்களை அறியும் படியும் சைவ சமயத்தை மாற்றி அரிநமோ என்ற நாமத்தை போதிக்க வேண்டும் என்றும் கம்பர் இயற்றிய இதிகாசப் பிரதியை எடுத்து வந்தனர்.

அமரசேனன் அவர்களை வரவேற்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஊரளித்து வன்னிச்சி என்ற விருதும் அளித்தான். அவளுடைய பெயர் களுவஞ்சி மங்கி அம்மை செட்டிச்சி மகிளரசி இராசம்மை பாலம்மை என்பனவாகும். இவர்கள் முறையே களுவாஞ்சிக்குடி செட்டிபாளையம் (செட்டிச்சிப்பாளையம்) மகிளரசு (மகிழூர் அல்லது மகிழடித்தீவு), வீரமுத்து வீரமுனை, பாலம்மை பாலமுனை எனும் இடங்களில் இருந்து ஆட்சி செய்து இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

**பட்டிருப்பு :-**

வியாபாரநோக்குடன் வெளியிலிருந்து வரும் செட்டிமார்களையும் துலுக்கர் வியாபரிகளையும் பார்த்திருந்த இடமே (பார்த்து இருப்பு) பட்டிருப்பாகியது.

**மகிழூர் :-**

மகிழ மரங்கள் அதிகம் நின்றதால் மகிழூர் ஆகியிருக்கலாம். மகிழரசி ஆடசிபுரிந்த இடமாகையாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

**எருவில் :-**

ஏரிகளும் குளங்களும் (வில்) இருந்த பகுதியாயிருந்தமையால் ஏரிவில் எருவில் ஆகியிருக்கலாம். என ஒரு சாரார் கூறுகின்றனர். இங்குள்ள குளத்தில் மாடுகள் எருப்போட்டதால் (சாணம்) எருவில் ஆகியிருக்கலாம் என மறுசாராரும் கூறுகின்றனர்.

**குறுமன் வெளி :-**

சிறிய சிறிய மன்னர்கள் நிறைந்திருந்த (வெட்டை) வெளி குறுமன் வெளி ஆகியிருக்கலாம். குறுமன் என்பவன் இருந்த இடம் இப்பெயர் பெற்றிருக்கலாம் எனப்படுகின்றது.

**ஒந்தாச்சி மடம் :-**

இங்குள்ளவர்கள் கன்னார்கள் எனப்பட்டனர். தட்டாரவேலை, இரும்படித்து ஆயுதம் செய்யும் கொல்ல வேலை செய்பவர்கள் இருந்த இடம் (ஓந்தாச்சி என்பது டச்சுச் சொல்லாகும்.) ஓந்தாச்சி என்பவன் தங்கியிருந்த மடம் ஒந்தாச்சி மடமாயிருக்கலாம். என ஒரு சாரார் கருத்து.

**கோட்டைக் கல்லாறு :-**

கல்லால் கட்டப்பட்ட கல்கட்டு உள்ள இடம் கோட்டைக்கல்லாறு எனப்பட்டது. இங்குள்ள உப்பாறு கடலுடன் சங்கமமாகின்றது. கோட்டை போன்று உள்ளதால் கோட்டைக்கல்லாறு ஆயிற்று.

**பெரிய கல்லாறு :-**

பெரிய கற்கள் நிறைந்த ஆற்றுப் பிரதேசம் பெரியகல்லாறு எனப்பட்டது. ஆனால் தற்போது அதிகம் படித்த கல்வியில் சிறந்தவர்கள் வாழும் இப்பிரதேசம் கல்வியாறு கல்லாறு என்று கூறப்படுகின்றது.

**துறைநீலாவணை :-**

இங்கிருந்து மேற்காக உள்ள கிட்டங்கி ஆற்றினைக்கடந்து படுவான்கரைக்குச் செல்லவேண்டும். துறையினை அண்டிய பகுதி துறைநீலாவணை எனவும் மறுபகுதி பெரியநீலாவணை எனவும் கூறப்பட்டது. தற்போது வடக்கு தெற்கு எனக் கூறப்படுகின்றது.

இங்கு காணப்படும் துறை தனிநபர் பெயருடன் இணைந்து அழைக்கப்படுகின்றது. என ஒரு சாரார் கருத்து நிலவுகின்றது. இதன்படி கி.பி 1013ல் கதிர்சுதன் என்னும் அரசனின் ஏக மந்திரியான நீலவண்ண சேனன் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இக்கிராமம் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தேர்தல் தொகுதி ஆகியவற்றின் தென்பகுதி எல்லையாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## போரதீவுப்பற்று (வெல்லாவெளி) பிரதேச செயலகப் பிரிவின் ஊரும் பெயரும்

**போரதீவு :-**

போர்முடை நாடு என்பது மருவி போரதீவு ஆகியது. இது கோயில் போரதீவு, பெரிய போரதீவு என இருபிரிவுகளாக உள்ளது.

**கோவில் போரதீவு :-**

போர்முடை நாடு வெள்ளைநாவல்பதி போரதீவு என அழைக்கப்பட்ட இடம் கோவில் சிறப்புக்காரணமாக கோவில் போரதீவு எனவும் சிறப்பிக்கப்பட்டது. இங்கு பத்திரகாளி அம்மன் கோவில் உள்ளது. அதில் பெரிய ஊர் பெரியபோரதீவு எனப்பட்டது. தீவு போன்ற பிரதேசம் ஆகையால் இப்பெயர் ஏற்பட்டது.

**பழுகாமம் :-**

கி.பி 10ம் நூற்றாண்டில் விந்தனைக்காட்டில் வாழ்ந்த ஆதிவாசிகளில் ஒருவரான பழுவன் வாழ்ந்த இக்கிராமம் பழவன் கமம் பழுகாமம் ஆகியது. பழுவன், கழுவன் ஆகிய இருவேடுவர்களில் ஒருவன் கழுவன் கேணியில் இருந்து ஆட்சி செய்ய பழுவனும் அவன் தங்கை கழுவஞ்சியும் தென்பகுதி சென்று களுவங்சி களுவாஞ்சிக்குடியிலும், பழுவன் பழுகாமத்திலும் ஆட்சி புரிந்ததாகவும் வரலாறு உண்டு.

**புன்னைக்குளம் :-**

புன்னைமரங்கள் குளத்தை அண்டி நின்றதன் காரணமாக புன்னைக்குளம் எனப் பெயர் ஏற்பட்டது. பொறுகாமம் என்ற பெயரும் உண்டு.

**பாலமுனை :-** பாலம்மை ஆட்சி செய்த இடம் பாலமுனை ஆயிற்று

**மாவேற்குடா :-** பெரிய வேலுடன் கூடிய கோயில் தலமாயிருந்ததனால் கோயிலூர் என்றும் மாவேற்குடா ஆகியது என்றும் கூறப்படுகின்றது.

**வன்னிநகர் :-**

வன்னியர்கள் ஆட்சிசெய்தது 16ம் நூற்றாண்டாகும். வன்னியர் பெயராலே வன்னி நகர் என்ற பெயர் ஏற்படலாயிற்று.

**முனைத்தீவு :-** ஊர் முனையில் (எல்லை) இருந்த தீவு போன்ற பகுதி முனைத்தீவு எனப்பட்டது.

**வெல்லாவெளி :-**

மட்டக்களப்பை ஆண்ட மதிசுதன் எனும் அரசன் சித்திரவேலாயுதர் ஆலயத்திற்கு ஆயிரம் அவுனுகள் காணிகள் திருத்தி செந்நெல் குறைவின்றி விளையும்படி மேட்டுநீரைத்தேக்க ஒரு அணையைக் கட்டினான். அவ்வணைக்குத் தன் மகன் நாதன் பெயரால் நாதனை என்றும் கோயிலுக்கு வழங்கப்பட்ட வயல்வெளிக்கு வேலாயுதர்வெளி என்றும் பெயர் சூட்டினான். வேலாயுதர் வெளி வெல்லாவெளி என்றும் திரிவுபட்டது.

**பலாச்சோலை :-** பலாமரங்கள் அதிகமாக சோலை போன்றிருந்ததால் பலாச்சோலை ஆகியது.

**மாலயர் கட்டு :-** மல்லர்கள் மூலம் கட்டப்பட்ட அணைக்கட்டினைக் குறிக்கும்.

**ஆனைகட்டிய வெளி :-**

ஆனை ஒன்றைப்பிடித்து கட்டியவெளி ஆனைகட்டிய வெளியாகியது.

**நெல்லிக்காடு :-**

நெல்லி மரங்கள் நிறைந்த காடு நெல்லிக்காடு எனப் பெயர்பெறலாயிற்று.

**பாலயடிவெட்டை :-**

பாலைமரங்கள் நிறைந்த நின்ற வெட்டை வயற்பரப்பு பாலையடி வெட்டை ஆகியது.

**கணேசபுரம் :-**

விநாயகக் கடவுளுக்கு முதன்மை வழங்கியதனூடாக ஏற்பட்ட சிறப்புப் பெயர்.

**றாணமடு :-**

றாணமரங்கள் அதிகமாகக் காணப்பட்ட இடமே றாணமடு என அழைக்கப்பட்டது.

**விபுலானந்த புரம் :-**

விபுலானந்தரின் பெயரால் ஏற்பட்டதே விபுலானந்த புரம்.

**கண்ண புரம் :-**

விஷ்னுகோயில் காணப்பட்ட இடமாதலால் கண்ணபுரம் எனப்பட்டது.

**காக்காச்சி வெட்டை :-**

இங்கு காகங்கள் தங்கியதால் காக்காச்சிவெட்டை எனப்பட்டது.

**தம்பலவத்தை :-**

தெம்பிலித் தென்னைமரங்கள் நிறைந்த தோட்டங்கள் உடைய கிராமம். (வத்தை - தோட்டம்) தெம்பிலிவத்தை என்பது மருவி தம்பலவத்தை ஆகியது.

**சின்னவத்தை :-**

சின்னத்தோட்டங்கள் நிறைந்த இடமாகையால் சின்னவத்தை எனப்பட்டது.

**மண்டூர் :-**

மண்டுமரங்கள் நிறைந்துள்ள ஊர் மண்ஊர் எனப்பட்டது. மேலும் கி.பி. 1107 மண்டூர் பதியை ஆண்ட மண்டு நாதன் பெயரால் மண்டூர் என அழைக்கப்பட்டது.

**தும்பங்கேணி :-**

தும்பை எனப்படும் காய்காய்க்கும் கொடிகள் நிறைந்திருந்த கேணி தும்பங்கேணி எனப்பட்டது.

**காந்திபுரம் :-**

காந்தி மகானின் பெயரினால் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றக்கிராமம் காந்திபுரம் எனப்பட்டது.

**சங்கர் புரம் :-** சங்கர் என்பவரின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட கிராமம் சங்கர்புரம் எனப்பட்டது.

**வீரச்சேனை :-** வீரமரங்கள் நிறைந்திருந்த காட்டுப் பிரதேசம் வீரச்சேனை எனப்பட்டது.

**இளைஞர் விவசாயத்திட்டம் :-**

இளைஞர்களால் ஏற்படுத்திய மரக்கறித் தோட்டங்கள் அடங்கிய பிரதேசம் விவசாயத் திட்டம் எனப்பட்டது.

**சுரவணையடி ஊற்று :-**

சுரவணை மரங்கள் சூழ நின்ற நீரூற்றுப் பிரதேசம் சுரவணையடி ஊற்று ஆகியது. மருங்கையடி முன்மாரி (மருங்கை மரங்கள் நின்ற இடம்) தளவாய் என்ற பெயர்களும் இதற்கு உள்ளன.

**வம்மியடி ஊற்று :-**

வம்மி மரங்கள் நிறைந்து நின்ற பிரதேசம் வம்மியடி ஊற்று ஆகியது. இதற்கு 40ம் கொலணி தாமரைமடு தகரஅட்டு என்ற பெயர்களும் உள்ளன.

**திக்கோடை :-**

இக்கிராமத்தில் எல்லாத் திசைகளிலும் சிறுசிறு ஓடைகள் நிறைந்திருந்தமையினால் (திக்குதிக்கா) திக்கு - திசை திக்கொடைக்கிராமம் எனப்பட்டது. ஓடாவியார் வெட்டை, புதுவட்டை, தும்பாலை, போன்ற பெயர்களும் இக்கிராமத்திறகு உள்ளது.

**கழுவுந்தன்வெளி :-**

கழுவன் என்பவரின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட (வெளி - வட்டை) கழுவுந்தன் வெளி எனப்பட்டது.

**39ம் கொலணி [ செல்வ புரம் ] :-**

வயல் வெளிகள் நிறைந்த பிரதேசம் செல்வச் செழிப்புடன் காணப்பட்டமையினால் செல்வபுரம் எனப் பெயர்பெற்றது. மிலாத்துச்சேனை ஊத்துச்சேனை, வாழைக்காலை, ஆகிய பெயர்களும் உள்ளன.

**38ம் கொலணி :-**

நவகிரி ஆற்றின் வாய்க்கால் வரும் பகுதியாதலால் நவகிரி நகர் எனப்பட்டது. புதுமுன்மாரி எனவும் பெயர் உள்ளது.

**விளாத்தோட்டம் :-**

விளாமரங்கள் அதிகம் காணப்பட்ட இடம் விளாத்தோட்டம் எனப் பெயர் பெற்றது.

**நெல்லிக்காடு :-** நெல்லி மரங்கள் அதிகம் காணப்பட்ட இடம் நெல்லிக்காடு ஆயிற்று எனலாம்.

## மண்முனை தென்மேற்கு (பட்டிப்பளை) பிரதேச செயலாளர் பிரிவின் ஊரும் பெயரும்

**அம்பிளாந்துறை :-**

அம்பிளா மரங்கள் துறையடியில் காணப்பட்டமையால் ஏற்பட்ட பெயர் திறந்த வெளித்துறை எனவும் பொருள்படும். அம்பிளா என்னும் ஒருவகை மரம் இத்துறைக் கரையில்காணப்பட்டதால் அம்பிளா துறையாயிற்று இம்மரத்துடன் தொடர்புடைய சிங்களக் கிராமங்களும் உள்ளன. அம்பிளாங்கொட, அம்பிளாங்கெற்ற, என்பனவாகும்.

திறந்தவெளி அல்லது தரிப்பிடம் உள்ள மண்டபத்தையும் அம்பலம் என்பர்.

மறுகரையில் பாளையம் அமைந்திருந்த செட்டிகள் தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவியாக இக்கரையில் ஒரு அம்பலம் அமைந்திருக்கலாம். மட்டக்களப்பு மான்மியக் கூற்றின் படி பண்டைய ராசாக்கள் கூடுகின்ற அம்பலம் (இடம்) மாக இருந்திருக்கலாம்.

முன்னாளில் ஆற்றைக்கடக்க கட்டுமரம், மரக்கட்டைகள், உபயோகமாக இருந்தன. காலவரையில் தோணி ஓடம் வள்ளமாக இவை மாற்றமடைந்தது. அம்பலக்காரர்களின் துறை அம்பிலாத்துறையாகவும் மாறியிருக்கலாம்.

**கற்சேனை :-**

சேனை செய்ய முன்னர் நிலத்தைப் பண்படுத்தியபோது கற்கள் வெளிவந்தமையால் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். அம்பிளாத்துறையில் உள்ளடங்கிய சிற்றூர் இதுவாகும்.

**சேனைக்காடு :-**

சேனை வெட்டியிருந்த காட்டுப் பிரதேசம் சேனைக்காடாகியது.

**தீவுக் குடியிருப்பு :-**

ஒரு முனையில் அமைந்திருந்த குடியிருப்புப் பகுதி தீவுக்ககுடியிருப்பாகியது.

**சின்னமடு :-**

நீர் நிறைந்திருந்த மடுக்களில் சிறியதாய் இருந்த மடுப்பிரதேசம் சின்னமடு ஆகியது.

**நடுக்குடியிருப்பு :-**

குடியேறிய பிரதேசங்களில் நடுவில் மக்கள் குடியமர்ந்த பகுதி நடுக்குடியிருப்பாகியது.

**நாகமுனை :-**

நாகமரங்கள் நிறைந்திருந்த முனைப்பகுதி நாகமுனையாகியது. நாகபாம்புகள் அதிகம் வாழ்ந்த குடியிருந்த பிரதேசம் எனவும் நாகர் இனக்குழுக்கள் வாழ்ந்த பிரதேசமாக இவ்விடம் இருந்துள்ளது என்பர்.

**வாழைச்சேனை :-**

வாழைப்பயிர்கள் செய்யப்பட்ட பிரதேசம் வாழைச்சேனை ஆகியது. வாழைச்சேனை என்ற கிராமப் பெயர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று இடங்களில் உள்ளன. கோறளைப்பற்று, பட்டிப்பளையில் அம்பிளாந்துறையில், வெல்லாவெளி மேற்குப் பகுதி ஆகியன.

**நாவற்காடு :-** நாவல் மரங்கள் நிறைந்து நின்ற கிராமம் நாவற்காடு எனப்பட்டது.

**முப்பது ஏக்கர் :-**

முப்பது ஏக்கர் விஸ்தீரணம் உடைய பிரதேசம் அந்த எண்ணிக்கையினால் முப்பது ஏக்கர் எனப் பெயர் பெறலாயிற்று.

**வண்ணாண்ட சேனை :-**

வண்ணாரத் தொழில் (சலவை) செய்யும் ஒருவர் வெட்டிய சேனைப் பிரதேசம் வண்ணாண்ட சேனை எனப் பெயர் பெற்றது.

**நீலண்ட மடு :-**

நீலன் எனபவன் இம்மடுவனை அண்டி வாழ்ந்து மீன்பிடித்து வந்த மடு நீலண்ட மடுவாகியது.

**அத்தியா முன்மாரி :-**

அத்திமரங்கள் நிறைந்திருந்த வயல்பிரதேசம் அத்தியா முன்மாரி எனப் பெயர்பெற்றது. மாரிமழையை நம்பி செய்யப்படும் விவசாயநிலம் முன்மாரி எனப்படுகின்றது. (மானாவாரி) என்ற பெயரும் உள்ளது. நீர்ப்பாய்ச்சல் அற்ற வயல் நிலத்தைக் குறிக்கும். வேளாளர்பிரிவில் அத்தியாகுடி எனும் பிரிவினர் வயல் செய்த இடம்.

**குடா :-**

ஓர் ஒதுக்குப்புறமான குடியேற்றப்பிரதேசமாக இருந்த காரணத்தால் குடா (வலை) எனப் பெற்றிருக்கலாம்.

**வில்லு :-**

குளத்தையண்டிய பகுதி வில்லு ஆகியது. குளத்திற்கு வில், வில்லு என்று பெயர்கள் உள்ளன. தாமரையும், வில்லு வில் வளரும்.

**அரசடித்தீவு :-** அரசமரங்கள் அதிகம் காணப்பட்டமையால் ஏற்பட்ட பெயர் அரசடித்தீவு ஆகியது.

**கடுக்காமுனை :-**

கடுக்கா மரங்கள் முனையருகில் அதிகம் காணப்பட்டமையாலும் ஏற்பட்ட பெயர் பிரித்தானியர் இலங்கைக்கு வந்து நீண்டகாலத்தின் பின்பே கண்டியைக் கைப்பற்றினர். பிரித்தானியர் தமது அரசினை முழு இலங்கைகளும் விஸ்தரித்தனர். அப்பொழுது செய்யப்பட்ட ஒப்பந்தப் பத்திரிகைளில் இக்கிராமத்துக் கடுக்காமுனை போடியாரும் கையொப்பம் இட்டிருந்தார். இவரது கையொப்பம் மாத்திரமே தமிழில் இருந்ததாகக் கூறப்படுகின்றது. இதனை மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் திரு. மோனகுருசாமியும் உறுதிப்படுத்தியுள்ளார். இதன்படி கடுக்காமுனைப் போடியின் பெயரால் அக்கிராமம் அழைக்கப்படுகின்றது. என்பதும் கூற்றாய் உள்ளது.

**பட்டிப்பளை :-**

மாட்டுத்தொழுவம் (மாடு கட்டும் காளை) இருந்தபடியால் பட்டிப்பளை ஆயிற்று என்பார்கள்.

**வெட்டுக்காடு :-**

சேனை செய்வதற்காக வெட்டப்பட்ட காட்டுப் பிரதேசம் பின்னர் சேனை செய்யப்படாமல் தரிசாகக் கிடந்த போது அப்பகுதி வெட்டுக்காடு எனப்பட்டது.

**பண்டாரியா வெளி :-**

பண்டாரிகள் எனப்படும் இறைநம்பிக்கையுடன் வாழ்ந்திருந்த வெளிப்பிரதேசம் பண்டாரியா வெளி எனப்பட்டது.

**கிளாந்தீவு :-**

கிளாமரங்கள் (முட்செடிகள்) எனப்படும் தாவரங்கள் வளர்ந்திருந்த தீவு போன்ற பகுதி கிளாத்தீவு ஆகியது.

**குடியிருப்பு :-** மக்கள் புதிதாகக் குடியேறி அமர்ந்திருந்த கிராமம் குடியிருப்பாக ஆகியது.

**சேனைக்குடியிருப்பு :-**

ஊர் மக்கள் சேனை வெட்டி குடியிருந்த சேனைப் பிரதேசம் சேனைக்குடியிருப்பாகியது.

**மகிழடித்தீவு :-** மகிழ மரங்கள் நிறைந்திருந்த பிரதேசம் மகிழடித்தீவு ஆகியது.

**அருள்நேச புரம் :-**

அருளானந்தம் என்னும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரும் (DRO) தேவநேசன் என்னும் அரசாங்க அதிபரும் இணைந்து ஏற்படுத்திய குடியேற்றக் கிராமம் அருள்நேசபுரமாகியது.

**வால்கட்டு :-** கட்டப்பட்ட அணைக்கட்டின் கடைசிப்பகுதி வால்கட்டு எனப்பட்டது.

**சோதயன் கட்டு :-**

சோதயன் எனப்படும் அரக்கர்களைக் கொண்டு கட்டப்பட்ட அணைக்கட்டு இப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் முக்கியமாக மட்டக்களப்பு மாநிலத்தில் பல கிராமங்களில் சோதயன் கட்டுக்கள் உள்ளன. குளக்கோட்டன் மன்னன் ஆட்சி செய்த ஆட்சிக்காலப்பகுதியில் பூதங்களைக் கொண்டு அவன் கட்டிய கட்டுக்களே இப் பெயர் பெற்றதாக கர்ணபரம்பரைக் கதையுள்ளது.

**குறிஞ்சாத்தீவு :-**

தீவுப் பகுதியில் குறிஞ்சா என்னும் மருத்துவக் குணமுடைய கொடிகள் நின்றதன் காரணத்தினால் இப் பெயர் ஏற்பட்டது.

**முனைக்காடு :-**

வாவியின் ஊடுருவல் மூலம் ஏற்பட்ட முனைப்பகுதி காடாகக் காணப்பட்டதால் ஏற்பட்ட பெயர்.

**முதலைக்குடா :-**

குடாப் பகுதியில் முதலைகள் அதிகம் காணப்பட்டதால் முதலைக்குடா ஆயிற்று. மட்டக்களப்புப் பிரதேசத்தில் முதலைகளை வசியப்படுத்தி மந்திரங்கள் செய்பவர்கள் உள்ளனர். நாசிவன் தீவு (கோறளைப்பற்று) கிராமத்தில் வசித்து வந்த ஒரு மந்திரவாதி (காலமாகிவிட்டார்) யின் பெயர் முதலையர் எனப்பட்டது.

**குழுவினாமடு :-**

குழுமாடுகளும், புன்னைமரங்களும் மடுவும் நிரம்பிய பகுதி புன்னை மரங்களின் கீழ் உள்ள மடுக்களில் குழுமாடுகள் (காட்டு மாடுகள்) நின்ற பகுதி இப் பெயர் பெற்றது.

**படையாண்ட வெளி :-**

போர்க்காலத்தில் எதிர்ப்படைகளை கண்ட பிரதேசம். படைகளுக்கு மன்னர் மூலம் மானியமாகக் கொடுக்கப்பட்ட பிரதேசம்.

**வட்டியா மடு :-** வட்டிபோன்ற (சாப்பிடும் பாத்திரம்) வட்டமான மடுப்பகுதியால் இப்பெயர் பெற்றது.

**கொக்கட்டிச்சோலை :-**

கொக்கட்டிய மரங்கள் சோலைக்காடுகளாக நின்ற பிரதேசம் கொக்கட்டிச்சோலை எனப்பட்டது. தான்தோன்றீஸ்வரர் ஆலயம் இங்கு உள்ளது.

**தாந்தாமலை :-**

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் ஆலயப் பொருட்கள் (திரவியம்) உள்ள இடமாதலால் இப் பெயர் பெற்றது. தான்தோன்றீஸ்வரர் தாண்டவமாடிய மலைப்பிரதேசமாதலாலும் இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். மேலும் தா என் போர்க்கு இந்தா எனக்கொடுக்கும் வல்லமை பெற்ற இறைவன் உள்ள இடமாக கருதப்படுகின்றது.

**தாழையடி வளவு :-**

தாழைமரங்கள் நின்ற வளவு இதனால் இப் பெயர் ஏற்பட்டது.

**சேனை வளவு :-**

சேனைப் பயிர் செய்திருந்த வளவு இப்பெயர் பெற்றது.

**கரும்புக்காலை :-**

கரும்புப் பயிர்கள் செய்த இடம் கரும்புக்காலை ஆகியது.

**வெட்டுக் குளம் :-**

காடுகளை வெட்டிப் புதிதாகப் புனரமைப்புச் செய்யப்பட்ட குளம் வெட்டுக்குளம் ஆகியது.

**நாவற்காட்டு வளவு :-**

நாவல் மரங்கள் நின்ற வளவு நாவற்காட்டு வளவு ஆகியது.

**வாய்க்கால் பாலம் :-**

இது மாவடி முன்மாரியில் ஆத்துச்சேனையில் உள்ளது. வாய்க்காலின் மேலாக இரும்புப் பாலம் ஒன்று உள்ளது. இதனால் ஏற்பட்ட பெயர்.

**மாவடிமுன்மாரி :-**

முன்மாரிபோக வயல் நிலத்தில் மாமரங்கள் நின்றதால் ஏற்பட்ட பெயர்.

**தளவாய் கிணற்றடி :-**

தளவாய் வெட்டை பிரதேசத்தில் கற்கிணறு இருந்த காரணத்தினால் எற்பட்ட பெயர்.

**தாந்தாபுரம் :-**

தாந்தா மலையினை அண்டியபுதிய குடியேற்றப்பிரதேசம் இப் பெயர் பெற்றது.

**நாற்பது வெட்டை :-**

நாற்பதாம் கொலனிக்கு சொந்தமான வயற்பிரதேசம் நாற்பது வெட்டை எனப்பட்டது.

**நெல்லிக்காடு :-**

நெல்லி மரங்கள் நிறைந்த வயற்பிரதேசம் நெல்லிக்காடு எனப்பட்டது.

**றெட்பானா :-**

தாந்தாமலையை அண்டிய குடியேற்றப்பிரதேசம் றெட்பானா என்ற நிறுவனத்தின் உதவியுடன் குடியமர்த்தப்பட்டதால் இப் பெயர் ஏற்பட்டது.

**கொறுக்காப்புளி ஊற்று :-**

கொறுக்காய் மரங்கள் நின்ற ஊற்று மடுப்பிரதேசம் இப் பெயர் பெற்றது.

**அலியார் வெட்டை :-**

அலியார் என்னும் விவசாயி விவசாயம் செய்த பிரதேசம் இப்பெயர் பெற்றது.

**மண்மலை :-**

மண் போன்ற மலைப் பிரதேசம் மண்மலை எனப்பட்டது.

**கொல்லனுலை :-**

கொல்ல வேலை செய்த ஒருவன் இரும்பு அடிக்கும் உலைக்கருவியைத் திருத்திய இடம் கொல்லனுலை ஆகியது.

**தேவிலாமுனை :-**

தெவிலா மரங்கள் நின்ற முனைப்பிரதேசம் தெவிலா முனையாகவும் திரிந்து தேவிலாமுனையாகவும் மாறியது.

**கல்லிறக்கம் :-**

தாழ்ந்த பாதையினுடைய கற்களிலான பகுதி கல்லிறக்கமாகியது.

**காயான்மடு :-**

காயான் மரங்கள் செறிந்து நின்ற மடுப்பிரதேசம் காயான்மடுவாகியது.

**கத்தாளைச்சேனை :-**

கற்றாளை எனப்படும் மருத்துவக்குணமுடைய தாவரம் நிறைந்திருந்த பிரதேசம் கத்தாளைச்சேனை ஆகியது.

**மல்லர்சேனை :-**

தைரியமாகச் சண்டைபிடிக்கும் ஒருவர் வாழ்ந்த சேனைப் பகுதி மல்லர் என்பது ஒருவரின் பெயர் (மல்லர்சேனை)

**கச்சக் கொடி சுவாமிமலை :-**

கச்சக் கொடி எனப்படும் கொடிகள் நிறைந்த மலையில் கோயில் அமைக்கப்பட்டிருந்ததனால் இப் பெயர் ஏற்பட்டது.

**பனிச்சையடி முன்மாரி :-**

பனிச்சை மரங்கள் நின்றிருந்த வயற் பிரதேசம் என்பதனால் இப்பெயர் ஏற்பட்டது.

**பத்தர் குளம் :-**

பத்தர் எனப்படும் ஒருவர் இக் குளத்தில் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தியதால் ஏற்பட்ட பெயர்.

**மாலையர் கட்டு :-**

மாலையணிந்து திரிந்த ஒருவர் மாலையர் அவர் குடியிருந்த கட்டுப் பிரதேசம் அல்லது அவரால் அமைக்கப்பட்ட கட்டுப் பிரதேசமாயிருக்கலாம்.

**மணல் பிட்டி :-**

மணல் நிறைந்த பிட்டி மணல் பிட்டி ஆயிற்று என்பதுடன் இவ்விடம் ராசாக்கள் தங்கிய இடமாக கருதப்படுகின்றது.

**சேவகப்பற்று :-**

கண்டி மன்னனுக்கு மானியம் செலுத்தும் வயல் நிலங்களில் ஒன்று இப்பிரதேசத்தினை அமெரிக்க செரண்டிப் தனியார் கம்பனி இறால் வளர்ப்பு செய்ய இது பயன்படுத்தப்பட்டதுடன் 1987ம் ஆண்டு இவ்விடத்தில் இனவன்முறையால் மக்கள் பாரிய படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

**நாகக்கட்டு :-**

பண்டாரியா வெளி பிரதேசத்தில் நாகதம்பிரானை வழிபட்ட இடம் நாகக்கட்டு ஆயிற்று என்பர்.

**நீறு போட்ட சேனை :-**

உலக மகாயுத்தம் இடம் பெற்ற போது பிரித்தானிய படையினர் தமது படைகள் இருந்த இடங்களை ஏனைய தமது படையினருக்கு அடையாளப்படுத்திக் காட்டும் வகையில் விமானத்திலிருந்து நீறு போட்ட இடங்கள் நீறு போட்ட சேனை எனப் பெயர் பெற்றது.

---

இலங்கையினை ஆக்கரமித்த அன்னிய இனங்களுக்கு எதிரான யுத்தத்தினை முதன்முதலில் தமிழர்களே வன்னிப் பிரதேசத்தில் மேற்கொண்டனர்.

ஐரோப்பியர் பாக்கினை கப்பமாக பெற முயற்சித்தபோது அதனை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்ற போர் கமுக்ஞ்சண்டையென அழைக்கப்பட்டது.

இப்போரில் கமுகமரங்களையும்,மூங்கில்களையும் கவுண்களாக பயன்படுத்தி சண்டைகள் நடைபெற்றன. இவை பற்றிய தகவல்களை புலப்படுத்தும் பல்வேறுபட்ட சிற்றிலக்கியங்கள் காணப்பட்ட போது அவை பாரியளவு ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை.

இவை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு முன்னைய பாடநூல்களில் சங்கிலியனின் கதை, பண்டாரவன்னியனின் கதை காணப்பட்டது போன்று இவை சேர்க்கப்பட வேண்டும்.

இதே போன்று கிமு. 296ல் ஆரம்பித்த மட்டக்களப்பு அரச பரம்பரையைச் சார்ந்த உலகநாச்சியார், புலியமாறன், வவுணசிங்கன், சத்துருவண்டான் போன்றோர்களின் வரலாறுகளின் வேர்களினை நாம் தேடிக்கான வேண்டியது அவசியம் அதற்கு பல்கலைக்கழகங்களின் வரலாற்றுத்துறை உதவ வேண்டும். யாழ்ப்பாண வரலாற்றில் சங்கிலியனின் பரம்பரையினர் பற்றி ஆய்வு நூல்கள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

செல்வி. ஸ்கொலஸ்டிகா அமலினி நந்தகுமார்
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்.
பிரதேச செயலகம்,
கோறளைப்பற்று வாழைச்சேனை.



# நன்றிகள் இவர்களுக்கு

ஓர் நிறுவனம் வெற்றியடைய வேண்டும் எனின் அதனது தலைமைத்துவம் அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒத்துழைப்பினை பெற்று அதன் ஊடாக நிறுவனத்தின் நோக்கினை விரைவாக அடையச் செய்ய முடியும். இவ்வகையில் எமது பிரதேச செயலாளரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒவ்வொரு பிரிவுகளும் தமது முழுமையான ஒத்துழைப்பினை அவருக்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்கையில் சிறந்த தலைமையினை வழங்கி வரும் பிரதேச செயலாளர் திருமதி.தெட்சணாகௌரி தினேஷ் அவர்களுக்கும், உதவிப் பிரதேச செயலாளர் திரு.சுந்தரமூர்த்தி ராஜ்பாபு அவர்கட்கும், உதவித்திட்டப் பணிப்பாளர் திரு.எஸ்.பிரபாகரன் அவர்கட்கும், கணக்காளர். திருமதி. ச. ஜெயந்திரா அவர்கட்கும், நிர்வாக உத்தியோகத்தர் ஜனாப் எஸ். ஏ. ரஹீம் ஆகியோருக்கும் எனது முதற்கண் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிஞர் ஜார்ஜ்ஹெரபெட்டின் கருத்தின்படி **"மூன்று மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு வாழ்ந்து வந்தால் அவர்களால் ஆறு மனிதர்கள் சுமக்கக்கூடிய சுமையினை இலகுவாகச் சுமக்க முடியும்"** எனும் கருத்தின் படி பேரவையின் வெற்றிக்கு உறுதுணையாகக் காணப்பட்ட சமூர்த்தி முகாமையாளர் தேவமனோகரி பாஸ்கரன், சமூர்த்தி வங்கி முகாமையாளர் செல்வி. கந்தசாமி வினோதினி மற்றும் திரு. E. சீத்தாராமன், திருமதி. K. இந்திரகுமார், திரு.S.ரவிச்சந்திரன், செல்வி. D. டெனி, திருமதி. A. Pஆய்சா, திரு.J. A. A. ஜவாட், செல்வி.T.பவானி, திருமதி. S. மகேந்திரா, செல்வி. T. ரஞ்சிதா, திருமதி. V. விமலசிறி, செல்வி.MBF.பர்சானா, செல்வி.T.கிஷாந்தினி, திரு. K. சண்முகநாதன், திருமதி. S. குமாரவேல், திரு. J. லோபனராஜ், திரு. K. ஜெகதீஸ்வரன், செல்வி. N. மந்தாகினி, திரு. K. நாகநாதன், திரு. K. கிருஷ்ணகாந், திரு. K. திவாஸ்கர், திரு. S. அரியக்குட்டி, திரு. K. கஜேந்திரராஜா, திரு. K. மாதுளகுமார், திரு. K. சுப்பையா, திரு. MACM. றுமைஸ், திரு. T. சங்கரலிங்கம், திரு. SM. முர்ஸித், திருமதி.V.விஜயலக்ஷ்மி, திரு.Y.பிரபாகரன், திருமதி.K.வாசுகி, திருமதி.Y.சுபாகரன், திரு. MM. ஜௌபர், செல்வி. Y. பிரவீனா, செல்வி. K. நவநிதனி, திரு.K.அற்புதநாதன், திருமதி. S. சுகுணா, திரு. L. தனஞ்சயன், திரு. P. விஸ்வகோகிலன், திருமதி. S. சுமித்ரா, திருமதி. S. கவிதா, திருமதி. S. யோகராசா,

திரு. T. பாஸ்கரன், செல்வி. R. விஜயமாலினி, திரு.சி. ஜெயசேகர், செல்வி. K. நவநிதனி, திரு.Y.ஜெயக்குமார். திரு.அ.அழகுராஜ், செல்வி. சிறிசர்மிளா, திரு.SM.புவராஜ்குமார், திரு.ஜெயக்குமார், திரு.R.விக்கினேஸ்வரன், திருமதி.L.ஜீவராணி, திரு.V.ஜீவரெத்தினம், திரு.S.வரதராஜன், திரு.ஜீவானந்தம், திரு.V.பூபாலராஜா, திருமதி. S. சீலாவதி, திரு.S. S.பைரூஸ், திரு.N.ஜெயக்காந், திரு. R.பிரேமகாந்தன், திரு.K.விமலநாதன், திருமதி.Y.லோகநாயகி, திருமதி.M.ஜீவானந்தா, திரு.M.வினுராஜ், திரு.M.ரவி, திருமதி.M.பத்மசாந்தி, திரு.P.சிவநாதன், திருமதி.S.ரேனுகா, திரு.சுரேஸ்குமார், திரு.P.கலைவாணன், திரு.S.T.தேவராஜா, திருமதி.சந்திரமோகன் டிலாயினி, திருமதி.ஹானுகிருஷ்ணா, திருமதி.கோபியராஜ் ராதிகா, திரு.A.மொஹமட் ரியாஸ், திருமதி. R. கமலேஸ்வரி, திருமதி. பேரின்பகுமார் தயானி, செல்வி. ரஜிதா கிருஷ்ணபிள்ளை, செல்வி. ராஜேந்திரன் தயானந்தி, திரு. செல்வராசா விஜய், திரு.P.வசந்தன், K.நிலோஜினி, திரு. அப்துல்ரகுமான் முஹமட்தம்பி, திருமதி.மேகலா சிவகுமாரன், R.தர்ஷினி, K.சசிகலா, திருமதி. நளாயினி புஸ்பேந்திரன், திருமதி. மாதவி சுவேந்திரன், திருமதி.விஜித்தா ராமு, திருமதி. யாளினி ராஜரெட்ணம், திருமதி. குகேந்தினி பஞ்சாட்சரம், திலிபா செல்வராசா, திருமதி.செல்வரதி சிவநேசன், திரு.கோணேசமூர்த்தி, திரு.விஜயகண்ணன், திருமதி. கிசாந்தன்சாந்தகுமாரி, செல்வி. கோம்பரம் கலைச்செல்வி, செல்வி.செல்வமலர்மைலிட்போடி, திருமதி.அஸ்வினி கிருஸ்ணகாந்தன், செல்வி.வடிவேல்முருகன் பிரஷாந்தினி, திரு. சிவராஜா யுகராஜன், திரு. கோபாலப்பிள்ளை சிறிதரன், திரு.மோஷஸ் ஜெபனேஷன், செல்வி. மனோகரராஜா மனோஜினி, செல்வி. சந்திரன் அனிட்டா, செல்வி. கதிர்காமத்தம்பி இந்திராணி, திருமதி. ராதிகா சுரேஸ், செல்வி. சுந்தரலிங்கம் விஜித்தா, செல்வி. பேரின்பம் ஜெகதா, திரு. யுகராஜா ஜெயராஜ், திரு. செபமாலை கிஷாந்தன், செல்வி.துஷாந்தினி தெய்வநாயகம், திருமதி.ரவீந்திரன் ரஜிதா, செல்வி. ஆறுமுகம் அரசிளங்குமாரி, திரு. சிவபாலன் பார்த்தீபன், திரு. கணேசமூர்த்தி சுகீதரன், திரு. சீனித்தம்பி கோமளன், திரு. பாக்கியராஜா சசிகரன், திரு. செபரட்ணம் சுதர்சன், திரு. சிவராசா ரேவதன், திரு. பெரடிக் மோசுஷஸ், திருமதி. பிரசாத் பிரதீபா, செல்வி. கதிர்காமத்தம்பி வானதி, செல்வி. தில்லையம்பலம் இந்துமதி, திருமதி. சுதர்ஜினி குணரெட்ணம், திரு. அருள்நாயகம் விஜிதா, திரு. அழகரெட்ணம் அழகுராஜ், திரு. நகுலேஸ்வரன் நகுலராஜ், திரு. மகேந்திரன் செந்தூரன், திரு. நாகலிங்கம் பிரதீபன், திரு.கனகரட்ணம் சந்திரகாசன், திரு.தேவராஜா சுதாராஜா, செல்வி.யோகநாதன் பிரியா, திரு.ஜெ.எம்.ருபீன், திருமதி.கந்தசாமி வாகேஸ்வரி, திரு.முஹமட்புஹாரி நளீம், திருமதி.ஏன்ஜல் ஜெனீபர் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

# மலர் வெளியீட்டில் நன்றிக்குரியவர்கள்

அச்சிட தனது தனிப்பட்ட முயற்சியினால் நிதி வழங்கிய கோறளைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் திரு.தா.உதயஜீவதாஸ் அவர்களுக்கும் விழாவுக்கான நிதியுதவியினை மேற்கொண்ட கிராமசேவையாளர் அவர்களுக்கும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

அட்டையினை வடிவமைத்த மல்ரிவிஷன் கணிணி நெறியாளர் திரு.T.சங்கர் அவர்களுக்கு எனது நன்றிகள்.

பிரதேச செயலகங்களில் உள்ள ஊர்களின் பெயர்களையும், அதற்கான காரணங்களையும் ஆய்வு செய்ய உதவிய சகல பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களுக்கும்,கலாசார நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்கும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும், எனது தனிப்பட்ட நன்றிகள்.

வாழ்த்துச் செய்தி நல்கிய உயர் அலுவலர்களுக்கும் . . . .

மலரைக் கணணி முறையில் அச்சிடவும், உரியவேளையிலும் அச்சிட்டு வெளியிட உதவிய நியூ கீன் அச்சகத்தினருக்கும் . . . .

விழா மண்டபம் நல்கிய கோறளைப்பற்று பிரதேச சபைத்தலைவர் திரு.தா.உதயஜீவதாஸ் ஆகியோருக்கும் எனது தனிப்பட்ட நன்றிகள்.

நன்றியுடன் . . . .

செல்வி.ஸ்கொலஸ்டிகா அமலினி நந்தகுமார்,
கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரும்
கலாசார பேரவை உப செயலாளரும்
பிரதேச செயலகம் வாழைச்சேனை.

## இளம்பரிதி - 2012 / 2013 இன் உசாத்துணை நூல்களும் வாய்மொழித் தகவல்கள் வழங்கியவர்களும்

01. மட்டக்களப்பு மான்மீயம் - **வித்துவான் F.X.C நடராசா.**
02. மட்டக்களப்பு தமிழகம் - **வித்துவான் V.C கந்தையா.**
03. மட்டக்களப்பு சைவக் கோயில்கள் வித்துவான் V.C **கந்தையா.**
04. இலங்கையின் 50வது ஆண்டு சுதந்திர தினச் சிறப்பு மலரான வடக்கு, கிழக்கு மாகாணசபை வெளியீட்டு மலர் - **திரு.ம.சற்குணம் எழுதிய இடப்பெயர் வரலாறு மட்டக்களப்பு.**
05. மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப்பண்பாடு - **2வது உலக இந்து மாநாட்டின் மட்டக்களப்பு கிளை வெளியீடு.**
06. மட்டக்களப்பு வரலாறு - **திரு.ஞா.சிவசண்முகம் குகன் குல முக்குகர் வரலாறு.**
07. மட்டுநகர் ஸ்ரீ மாமாங்கப்பிள்ளையார் ஆலய வரலாறு - **திரு.த.நாகையா ஆசிரியர்.**
08. மட்டக்களப்பு நாட்டாரியல் - **திரு.வ.சிவசுப்பிரமணியம்.**
09. தமிழர் வரலாறு, இலங்கை இடப்பெயர் வரலாறு - **கதிர்தணிகாசலம்.**
10. கோறளைப்பற்று வாழைச்சேனை பிரதேசசெயலக கலாசாரப்பேரவை வெளியீடு - **இளம்பரிதி - 2002 / 2011.**
11. மண்முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் முத்தமிழ்விழா மலராகிய **அகணி ஆண்டு - 2003.**
12. மண்முனைப்பற்று (ஆரையம்பதி) பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் **முத்தமிழ் விழாச் சிறப்பு மலர் 1998.**
13. ஏறாவூப் பற்று (செங்கலடி)பிரதேச செயலக கலாசாரப்பேரவையின் முத்தமிழ் விழா மலராகிய **நானிலம் ஆண்டு 1997.**
14. கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச செயலக முத்தமிழ் விழா மலராகிய **வாகை ஆண்டு - 2008.**
15. மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கலாசாரப்பேரவையின முத்தமிழ் விழா மலராகிய - **சுயம்பு 2012.**
16. பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் தொடர்பான புள்ளி விபரவியல் ஆய்வு மட்டக்களப்பு மாவட்டம் - 2008.

## வாய்மொழித் தகவல்கள்

01. **பேராசிரியர் செ. யோகராசா** (கிழக்குப் பல்கலைக்கழகம்)
02. **கலாபூஷணம் திரு.தாழை செல்வநாயகம்** - (ஓய்வுபெற்ற பகுதி வனஅதிகாரி)
03. **அமரர்.க.மகேஸ்வரலிங்கம்** - (ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்)


395km
312km
GULF
OF MANNAR
257km
142km
282km
303km
35km
31km
322km
27km
43km
64km
99km
238km
INDIAN OCE
116km
195km
160km